# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

ஜனவரி - 1977



கலை இலக்கிய மாத இதழ்

விலை சதம்: 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாசன் மதுச்சாலை

உரிமையாளர்கள் :- பொ. பழனிச்சாமி, சு. சந்திரதாஸ்

398, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

வெளிநாட்டு உயர்தர மதுபான வகைகளும்
உள்நாட்டுத் தரமான குடிவகைகளும்
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண நகரில் மதுப் பிரியர்களுக்குச் சுலபமாக
மது கிடைக்கக் கூடிய வசதிகளைக் கொண்டது
இந்த நிறுவனமாகும்

வனிதையர் விரும்பும் வகைவகையான
**பிடவைத் தினிசுகள், கூறைச்சேலை வகைகள்**

ஆடவர் விரும்பும் அழகிய
**சேட்டிங், சூட்டிங் வகைகள்** குழந்தைகளுக்கான
**றெடிமேட் உடைகள்**

மற்றும்
**அழகுசாதனப் பொருள்கள்**

யாவும் நிதான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்

● பிடவைத் தினிசுகள்
எதுவானாலும்

தொலைபேசி 7545

# "மணியம்ஸ்"

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'

பன்னிரண்டாவது ஆண்டு

1977
ஜனவரி
105

# 'Mallikai' Progressive Monthly Magazine

மல்லிகை

முகவரி:
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234- A கே.கே .எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(இலங்கை)

MALLIKAI
Editor: Dominic Jeeva
234A, K. K. S. Road,
JAFFNA.
Sri Lanka

மணக்கும் 'மல்லிகை'
கதை, பெயர்
கவிதை, கட்டுரை,
கருத்து,
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்
பொறுப்பும் அவரே

முதலில் சகலருக்கும் புத்தாண்டு — பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஜெயகாந்தனின் 'ஜய ஜய சங்கர...' குறுநாவல் சம்பந்தமாகப் பலர் கடிதம் எழுதியுள்ளனர். அக் கருத்துத்தான் சரி என்பதல்ல. மாற்றுக் கருத்துக்களையும் நாம் வரவேற்கக் காத்திருக்கின்றோம். கருத்து மாறுபாடுள்ளவர்கள் எழுதலாம். இலக்கிய சம்பந்தமான வாதப் பிரதிவாதங்கள் ரசனையைச் செழுமைப் படுத்துமே தவிர, அதைப் பங்கப் படுத்தாது என்பது நமது எண்ணம்.

'தூண்டில்' கேள்வி — பதில் இம்முறை இடம் பெறவில்லை. காரணம் பக்கம் இன்மைதான் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். பல சுவையான கேள்விகள் வரத் தொடங்கியுள்ளன. அவற்றிற்கு அடுத்த அடுத்த இதழ்களில் பதில்கள் சொல்லப்படும்.

தமிழகத்துக்கும் நமக்கும் நவம்பர் — டிசம்பர் மாதங்களில் காலநிலை சீர்கேட்டால் கப்பல்- போக்குவரத்து இன்மையால்- தொடர்புகள் துண்டிக்கப்படுவது சர்வ சாதாரணம். இம்முறை நீண்டு விட்டது. அதற்குப் பரிகாரமாகச் சமீபத்தில் தமிழ் நாடு சென்று வந்த எழுத்தாள நண்பர் திரு. க. கைலாசபதி அவர்களின் கட்டுரை அடுத்த இதழில் ஆரம்பிக்க இருக்கின்றது.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செம் மண்ணைப் பொன்னாக்கிய மனிதன்!

திரு. இ. கிருஷ்ணசாமி அவர்களினது இழப்பு மிகப் பெரிய நஷ்டம்தான். இதை மனம் உணருகின்ற பொழுது ஏதோ ஒரு வெறுமை நெஞ்சத்தைக் குடிகொண்டு விடுகிறது.

தந்தையை இழந்தபொழுது துக்கித்திருக்கிறேன். சில காலத்துக்கு முன்னர் தாயைப் பறிகொடுத்த சமயம் சோகம் நெஞ்சை அலைக்கழித்தது என்னமோ உண்மைதான். இவைகள் தனி மனித இழப்பினால் — பிரிவினால் ஏற்பட்ட துக்கம்தான். ஆனால் கிருஷ்ணசாமி அவர்களின் இழப்பு தனிமனித நஷ்டமல்ல. பொது நஷ்டம்; பொது வாழ்வுக்கே மிகப் பெரிய இழப்பாகும் அது.

எனவேதான் அந்தச் சோகம் எனது நெஞ்சில் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

ஆரம்ப காலத்திலிருந்தே அவரை அறிவேன். இடது சாரி இயக்கத்தின் ஒரு முழு நேர ஊழியராக முப்பது ரூபாய் மாத அலவன்ஸில் அவர் வாழ்க்கையை மிக எளிமையாக ஆரம்பித்து நடத்திய காலத்திலும், மிகப் பெரிய திராட்சைத் தோட்ட அதிபதியாய் பவனி வந்த காலத்திலும் அவரை நான் நன்கு அறிவேன்.

கடைசிவரை எளிமையைக் கைவிட்டவரல்ல. அதே போல பரம்பரை இடதுசாரிப் பண்புகளை உதறி விட்டவருமல்ல.

அவர் உதவி செய்யாத துறைகளே இல்லை எனலாம். அள்ளியள்ளிக் கொடுத்த கை அவருடையது. அந்தக் கர்ணன் கை இன்று ஓய்ந்து மறைந்து விட்டது.

இலக்கிய ரசனையில் மன்னன். புகழ வேண்டியவற்றைப் புகழ்ந்து தூக்கிக் கொடுப்பதில் தணியாத ஆர்வம் காட்டிய அவர், இலக்கிய உலகிலுள்ள சகல எழுத்தாளர்களையும் இனங் கண்டு வைத்திருந்தார்.

சிலர் இவரை ஒரு விவசாயி என மாத்திரமே அறிந்து வைத்திருந்தனர். அதற்கு மேல் தன்னை வெளியே யாருக்கும் அறிமுகப் படுத்தப் படாமல் அமைதியாக இருப்பதையே விரும்பினார் இவர்.

செம் மண் வெறும் புகையிலை, மிளகாய், வெங்காயம், உருளைக்கிழக்குக்கு மாத்திரமே ஏற்ற மண் என்ற கமக்கார மனப்பான்மையை உடைத்தெறிந்து, அது பொன்னை உருவாக்கும் மண் என்பதைத் திராட்சை பயிரிட்டு பரிசோதனைகளின் மூலம் நிறுவிக் காட்டியவர் கிருஷ்ணசாமி.

அவரை மதிக்கும் நண்பர்கள் அன்னாருக்குத் தகுந்த ஞாபகச் சின்னமொன்று நிறுவ வேண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

—டொமினிக் ஜீவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்று போன பழைய ஆண்டும்
## பிறந்து வந்துள்ள புத்தாண்டும்

*1976 முடிந்து விட்டது.*

இந்த முடிவு பெற்ற ஆண்டு பல்வேறு பிரச்சினைகளில் எப்படிப்பட்ட ஆண்டாக இருந்த போதிலும் கூட, கலை, இலக்கியத் துறையைப் பொறுத்தவரை நமது நாட்டில் ஒரு நல்ல வருடமாகவே கணிக்கப்பட வேண்டியதாகின்றது.

இலக்கியத் துறையை எடுத்துக் கொண்டால் வேறெந்த ஆண்டுகளையும் விட, இந்த ஆண்டில் ஏராளமான பல்வேறு வகைப்பட்ட புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. பல புதிய சஞ்சிகைகள் உதயமாகி இருக்கின்றன. எழுத்தாளர் சம்பந்தமாகவும் பல புதிய ஆரோக்கியமான இலக்கியப் புது முகங்கள் உதயமாகிய ஆண்டும் இந்த வருடம்தான்.

இந்த ஆண்டில் நமது நாடு பூராவும் இலக்கியப் பிரக்ஞை பூர்வமான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், நூல் வெளியீடுகள் போன்றவைகள் நடந்தேறி வந்துள்ளதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனை விட, புதிய சினிமாப் படம் ஒன்று வெளிவந்து வெற்றிகரமாக மக்களால் ஆதரிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். அத்துடன் ஒன்பது தமிழ்த் திரைப்படங்களுக்கு இந்த ஆண்டில் பூஜை போடப்பட்டு, படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் ஒரு நல்ல ஆரோக்கியமான அறிகுறியாகும்.

பதிப்பகத் துறையைப் பற்றியும் நாம் மகிழ்ச்சியடைய நியாயமுண்டு.

ஒரு பிரபல நிறுவனம் நாவல் போட்டியை ஏற்பாடு செய்திருந்ததன் காரணமாக 80-க்கு மேற்பட்ட நாவல்கள் போட்டிக்கு வந்திருந்தமை ஒரு நல்ல முயற்சி. வேறொரு நிறுவனம் எழுத்தாளர்களின் நாவல்களை வெளியிட முன்வந்து சில நூற்களை வெளியிட்டுள்ளது. எழுத்தாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள கூட்டுறவுப் பதிப்பகம் இரண்டு புத்தகங்களைச் சென்ற ஆண்டுக் கடைசிக் கட்டத்தில் வெளியிட்டு, தொடர்ந்து படைப்பிலக்கியங்களை வெளியிடப் போவதாகவும் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக வர்த்தக நிலையில் நமது எழுத்தாளர்களின் படைப்புக்கள் மக்கள் மத்தியில் சென்றடையும் சூழ்நிலை உருவாகி வருவது கண்டு வேறு நிறுவனங்களும் இந்தத் துறையில் தமது கவனத்தைத் திருப்பி வருகின்றன.

நாடகத் துறையை எடுத்துக் கொண்டாலும் நமது கடந்த ஆண்டுச் சாதனை பெருமைமிக்கதாகவே அமைந்துள்ளது. இலங்கையின் நாலு பகுதிகளிலும் பல நாடகங்கள் அரங்கேறி இருக்கின்றன. இதில் பரிசோதனை நாடகங்களும் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இவற்றை மக்கள் வெகுவாக ரஸித்துப் பாராட்டியுள்ளனர். இவற்றுக்கு முத்தாய்ப்பாக மன்னாரில் இலங்கை கலாசாரக் கவுன்ஸில் ஆதரவில் நடைபெற்ற மரபு வழி நாடகங்களின் மேடையேற்றத்தை இங்கு குறிப்பிட்டுக் கூறலாம். பழம் பெரும் நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டு, அது மக்கள் மத்தியில் சென்றடைவதற்கு இப்படியான முயற்சிகள் சென்ற ஆண்டில் பரவலாகச் செய்யப்பட்டுள்ளன.

குடா நாட்டில் இன்னுமொரு நல்ல நிகழ்ச்சி நடைபெற அடியெடுத்து வைக்கப்படுகின்றது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தனியாகக் கலைப் பகுதிக்கென்றே உத்தியோகஸ்தர்களை நியமித்து, கலை, இலக்கிய நிகழ்ச்சிகளை வளர்க்க முன் வந்து செயலாற்றுகின்றன. கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த இந்த நிறுவனங்கள் வெறும் நுகர்ச்சிப் பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்வது மாத்திரமல்ல, தரமான கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதுடன், கலைஞர்கள், எழுத்தாளர்களைக் கௌரவிக்கவும் முன் வந்துள்ளன.

பல ப. நோ. கூ. சங்கங்கள் எழுத்தாளர்களின் நூற்களை விற்பனவு செய்யத் தமது நிறுவனத்தில் வசதி செய்து கொடுத்துள்ளதுடன் நாடகங்களை மேடையேற்றவும் ஒழுங்கு செய்து கொடுத்துள்ளமையும் கடந்த ஆண்டில் நடந்துள்ள மகிழ்ச்சிக்குரிய சம்பவங்களாகும்.

பொதுவாக நின்று, நிதானித்து, பழங் கணக்குப் பார்க்கப் போனால் முடிந்துள்ள சென்ற ஆண்டில் பல நல்ல சம்பவங்கள் கலை, இலக்கிய உலகில் நடைபெற்றுள்ளதை நாம் நிதானமாகவே ஒப்புக் கொள்ளுகின்றோம்.

இத்துடன் திருப்திப்பட்டு விடவில்லை, நாம்.

தொடர்ந்துள்ள இந்தப் புத்தாண்டில் இன்னும் நாம் சாதிக்க வேண்டிய எத்தனையோ சாதனைகள் உண்டு. நாம் வெற்றி கொள்ளக் கூடிய சங்கதிகள் ஏராளம், ஏராளம்.

துணிந்து முன் செல்வோம்.

**1977** — புதிய வெற்றிகளை நமது நாட்டுக்கு நல்கும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் எழுத்தாளர்கள் அநுபவிக்கும் வசதிகள்

அலெக்ஸி இரியாஸ்ஜேவ்

"சோவியத் கவிஞர்களுக்கு வருவாய் போதவில்லை; புதிய தொரு நூல் வெளிவரும் வரை அவர்கள் தமது ஜீவியத்துக்காக வேறு வேலைகள் தேடவேண்டி உள்ளது' என்று 'வாய்ஸ் ஒஃப் அமெரிக்கா' வின் ஒலிபரப் பொன்றில் அதன் விமர்சகர் விரித்துள்ளார்.

இது உண்மையா?

"நிச்சயமாக இல்லை" என்கிருர் மாஸ்கோ கவிஞரான திமித்ரி கொவாலெவ். இவர் ஒரு பிரபலமான கவிஞரல்ல. ஆயினும் அவரது படைப்புகள் வளமிகுந்தவை. இவர் பதினைந்து கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

'எங்கள் ஒவ்வொருவரதும் தொழிலே எழுத்துத்தான். வெளியாகும் கவிதைகளின் மூலம் வரும் வருமானத்தைவிட இலக்கியத்தின் மூலம் எமது திறமையைப் பயன்படுத்துவதற்கு ஏராளமான வருவாய்கள் உள்ளன. அத்துடன், எழுத்தின் மூலம் கிடைக்கின்ற சன்மானம் நாளைக்கு என்ன, எப்படியோ, என்ற அச்சமில்லாது நிறைவான வாழ்க்கையை வாழுவதற்குப் போதுமானது' என்கிருர் இவர்.

இதர சோவியத் கவிஞர்களும் இதை உறுதிப்படுத்தி உள்ளனர்.

8000 உறுப்பினர்களைக் கொண்ட தொழில் முறை எழுத்தாளர் கழகத்தில் நாவலாசிரியர்கள், நாடகாசிரியர்கள், விமர்சகர்கள், வசனகர்த்தாக்கள் ஆகியோர்களைக் காட்டிலும் கவிஞர்களது தொகை அதிகமாகும். இது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

## இலக்கிய வருமானம்

கவிஞர்களது வருமானம் என்ன?

வசன நடையைப் போலல்லாது, கவிதைகளுக்கு ஒவ்வொரு வரிக்கும் பணம் கொடுக்கப்படுகிறது. ஒரு வரிக்கு 70 கொப்பெக்குகள் முதல் (எட்டு ரூபா) இரண்டு ரூபிள்கள் வரை அளிக்கப்படுகிறது. சன்மானம் வழங்கப்படும்போது கவிதையின் தரமும் கவிஞரின் திறமையும் கவனத்திலெடுக்கப்படும். கவிதை நூல் ஒன்றை அச்சிடுவதாயின் 10,000 பிரதிகள் என்பதை ஒரு விதியாக நாட்டிலுள்ள சகல புத்தக வெளியீட்டாளர்களும் கருதுகின்றனர்.

கூடுதலாகப் புத்தகம் வெளியிடப்படும் பொழுது, ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலான தொகையைப் பெறுகிறார்.

ஒரு நூல் 50,000 பிரதிகளில் வெளியாகிறது என்றால், முதல் மூன்று 10,000-ம் பிரதிகளுக்கும் 60 சத வீதப்படி. நான்காவது 10,000-த்துக்கு 40 சத வீதப்படியும், ஐந்தாவதற்கு 35 சத வீதப்படியும் நூலாசிரியர் சன்மானம் பெறுகிறார்,

10,000 பிரதிகளுக்குக் குறைவாக நூல்கள் வெளியாவதுமுண்டு; அந்த வேளைகளில் கவிஞருக்கு ஒரு முழுமையான பதிப்புக்கான பணம் வழங்கப்படுகிறது.

கவிஞர் ஹெய்ம் மால்தின்ஸ்கின் யிட்டிஷ் மொழியிலான கவிதைத் தொகுப்பொன்று "இயேர்ஸ் மை இயேர்ஸ்' என்ற பெயரில் வெளிவந்தது. இதை வெளியிட்ட மாஸ்கோவின் 'சொவட்ஸ்கி பிஸாதெல்' பிரசுரத்துக்கு, விற்பனை நிலையங்களிலிருந்து 1,200 பிரதிகளுக்கான ஆடரே வந்தது. இருந்தபோதிலும் புத்தகம் வெளியிடப்பட்டது; கவிஞருக்கும் முழுத் தொகை வழங்கப்பட்டது.

கவிஞர்களது சிருஷ்டிகள் புத்தக உருவில் வரும் வரை அவர்கள் பார்த்துக்கொண்டிருப்பதில்லை, அவர்களது கவிதைகள் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் பிரசுரமாகின்றன; ஒவ்வொரு வரிக்கும் அவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுகிறது. ஒரு கவிதை 30 வரிகளுக்குக் குறைவாக இருப்பின் படிவீதப்படி 60 முதல் 200 ரூபிள்கள் வரை வழங்கப்படும். இவ்வாறு தான் கவிதைகளுக்கு சன்மானம் வழங்கப்படுகிறது.

**வாய்ப்புக்கள்**

கவிதை எழுதுவது என்பது இயல்பாகவே எல்லோருக்கும் ஒரேமாதிரி அமைவதில்லை. அது அவரவர் திறமையையும் படைப்பாற்றலையும் பொறுத்தது. சிலர் ஏராளமாகவும் இலகுவான நடையிலும் எழுதுவர், மற்றும் பலர் குறைவாக எழுதுவர், கடின நடையில் எழுதுவர். எனவே வருவாயும், வாய்ப்பும் வேறுபடுகின்றன, சில கவிஞருக்கு இடையிடையேதான் கவிதை எழுத முடியும். எனவே அவர்களால் கிரமமாக எழுத முடியாது. இந்த நிலைமை ஒரு கவிஞனுக்கு ஏற்படும் போது அவன் தனது ஜீவனோபாயத்துக்கு என்ன செய்வான்?

இப்படிப் பட்டவர்களுக்குச் சில வாய்ப்புக்கள் உள்ளன. இவர்கள் மொழிபெயர்ப்பில் இறங்கிவிடுவார்கள். சோவியத் யூனியன் ஒரு பல்தேசிய இனநாடு. சோவியத் யூனியனினது 76 தேசங்களினதும் தேசிய இனங்களினதும் மொழிகளிலும் டசன் கணக்கான வெளிநாட்டு மொழிகளிலும் [illegible]னகதைகள் பிரசுரமாகின்றன. சிறந்த இலக்கியப் படைப்புக்கள் பரந்த அளவில் மொழிபெயர்க்கப்பட்டு அனைத்து யூனியன் குடியரசுகளிலும் சுயாட்சிக் குடியரசுகளிலும் பிரசுரமாகின்றன, இது சோவியத் இலக்கியத்தின் பரஸ்பர செழுமைப்பாட்டை மேம்படுத்துவதுடன், ஒப்புவமையில்லாத தேசிய குணவியல்புக்குள் இலக்கியத்தைக் கொண்டுவருகிறது.

சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் மத்திய வெளியீட்டு நிலையமான 'சொவட்ஸ்கி பிஸாதெல்' இன் வருடாந்த திட்டத்தில், மொழிபெயர்ப்பு நூல்கள் 50 சதவீதத்தைக் கொண்டுள்ளன. ஒரு முழுநேரக் கவிஞர், கவிதைத் தொகுதியொன்றை வெளியிடுவதற்குத் தமது விருப்பப்படி பிரசுராலயம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும், தமக்கு விரும்பிய கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பொன்றைச் செய்யவும் முடியும். ஒவ்வொரு வரிக்கும் 40 கொப்பெக்கிலிருந்து 1·40 ரூபிள்கள்வரை சன்மானம் வழங்கப்படும்.

ஒரு பிரசுராலயத்தில், கவிஞரொருவர் தமது சகபாடிகளது கவிதைகளைப் பதிப்பிப்பதற்குத் தயார் செய்ய முடியும். கையெழுத்துப் பிரதிகளைப் பார்த்து மதிப்புரைகளை எழுதமுடியும் அல்லது கவிதைத் திரட்டொன்றைத் திரட்டிக் கொடுப்பதற்கு பிரசுராலயம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளமுடியும்.

**ஊக்குவிப்பு**

சோவியத் யூனியனில் பல்வேறு சமூகப் படிநிலைகளையும் சார்ந்த மக்கள் இலக்கியப் பணி மீது அடங்காத ஆவல் கொண்டுள்ளனர். இவர்களில் அறிவுத்துறை சார்ந்தவர்கள் மட்டுமல்ல, பள்ளிப் பிள்ளைகள், தொழிலாளர்கள். கூட்டுப் பண்ணை விவசாயிகள் ஆகியோரும் அடங்குவர். அவர்கள் ஏராளமாக எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறார்கள். அவர்களது ஆரம்ப முயற்சிகளுக்கு உதவு முகமாக செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ஆசிரியர் அலுவலங்கள், தொழில் முறை எழுத்தாளர்களது ஆதரவை நாடுகின்றன.

எழுத்தாளர் சங்கங்களில் புனைகதைகளைப் பிரபல்யப்படுத்தும் கழகங்கள் இயங்குகின்றன. இவை அனைத்து யூனியன் குடியரசுகளிலும், சுயாட்சிக் குடியரசுகளிலும், பிராந்தியங்கள், பிரதேசங்கள், நகரங்கள் சகலவற்றிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள் எழுத்தாளர்களது கூட்டங்களையும் இலக்கிய மாலை வேளைகளையும், வாசகர் மகாநாடுகளையும் தினசரி நடாத்துகின்றன. இவை கலாசார மாளிகைகளிலும், தொழிற் சாலைகள், கிராமப்புற கிளப்புகளிலும், கல்வி நிலையங்களிலும், இராணுவ யூனிட்டுகளிலும், இளம் பயனீர் ஓய்வு முகாம்களிலும் நடைபெறுகின்றன.

இந்தக் கூட்டங்கள், சந்திப்புக்களில் எழுத்தாளர்கள் தமது படைப்பு வேலைத் திட்டங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்கிறார்கள், வாசகர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்கள். சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் கணிப்பீட்டின்படி இக் கழகங்கள் 10,000 - 12,000 கூட்டங்களை ஒழுங்கு செய்கின்றது. எழுத்தாளர்களது பயணச் செலவு, ஹொட்டல் வசதி, உணவு வசதி ஆகியவற்றை இக் கழகங்களே கவனிக்கின்றன.

**இலக்கிய நிதி**

சோவியத் கவிஞர்கள் தமது ஜீவனோபாய வசதிக்காக உயர்ந்த வேதனம் வேண்டித் தமது இலக்கியப்பணியைக் கைவிடுவதும் வேறு தொழிலுக்கு மாறுவதும் இல்லை.

ஒரு கவிஞருக்கு தற்காலிகமாக இயலாத நிலைமை ஏற்படும்போது அவருக்கு உதவி வழங்க வழிகள் உண்டு. எழுத்தாளர்களையே கொண்ட கமிட்டியின் ஆலோசனையின்படி பல லட்சக்கணக்கான ரூபிள்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன. பிரசுராலயங்கள் பெறும் லாபத்தின் ஒரு பகுதியின் வழியாகவும் மற்றும் பல இலக்கிய ஸ்தாபனங்களின் வருவாய் வழியாகவும் இந் நிதிக்குப் பணம் சேருகிறது. இலக்கிய நிதியிலிருந்து எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் ஏராளமான உதவிகள் கிடைக்கின்றன. அவர்களுக்கு வழங்கப்படும் இந்த அலவன்ஸுகள் திருப்பிச் செலுத்தப்படவேண்டியவை அல்ல. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கருத்து

'ஜெயகாந்தனின் 'ஜெய ஜெய சங்கர' குறுநாவல் சம்பந்தமாக எனது மனப்பதிவுகள்' என்னும் தலைப்பிலே, மல்லிகை நவம்பர் இதழில் நீங்கள் எழுதிய கட்டுரையைக் கருத்தூன்றிப் படித்தேன். நான் அந்தக் குறுநாவலை இன்னும் வாசிக்கவில்லை. ஆயினும் அந்தக் குறை உங்களது கட்டுரையை வாசிப்பதற்குத் தடையாக இருக்கவில்லை.

உங்கள் கட்டுரையிலே நீங்கள் எடுத்துக் கூறியுள்ளவற்றிலே மிகப் பெரும்பாலான கருத்துக்கள் மறுக்க முடியாதவை; மறக்க முடியாதவை. அவற்றை முழு மனதோடு ஏற்றுக் கொள்கின்றேன். உங்கள் மனப்பதிவுகள் வெகு உறைப்பாக — தாக்கமாக எழுத்தில் விழுந்திருக்கின்றன. இத்தகைய அறுவை வைத்தியம்தான் இன்றைய தேவை.

கொழும்பு - 13. வ. இராசையா

★

தங்கள் சஞ்சிகையை விரும்பிப் படிப்பவர்களில் ஒருவன் நான். தமிழ் மொழி மீது ஆழ்ந்த அன்பு உடையவன். எனவே அதன் வளர்ச்சியில் அக்கறை கொள்ளுதல் இயல்பே. "அழியாமல் இருப்பதே ஒரு மொழிக்குப் பெருமையாகி விடாது; எல்லாத் துறைகளிலும் வளர்ந்து செழிப்பதுதான் மொழிக்குப் பெருமை — இவ்வாறு சாலை இளந்திரையன் ஓரிடத்தில் கூறியுள்ளார். எமது மொழி, பல்கிப் பெருகி வரும் பல்வேறு துறைகளுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையை அடைந்து விடுமோ என அஞ்சுகின்றேன். எமது சகோதர மொழியான சிங்களத்தில், குறிப்பாக எழுத்திலக்கணத்தில் பல திருத்தங்களை — மாற்றங்களை, காலத்திற்கும் தேவைக்கும் ஏற்றவாறு புகுத்துவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. தமிழில் இதுவரை எவரும் இவ்வித முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை.

ஆங்கிலத்தில் 27 எழுத்துக்களை வைத்துக் கொண்டு அநேகமாக எல்லா ஒலிகளையும் வெளியிட முடியும்போது தமிழில் 247 எழுத்துக்களை வைத்துக்கொண்டு திண்டாடுவதுதான் வேதனைக்குரியது. இதில் புது மாற்றங்களைப் புகுத்துதல் முடியாதா? மேலும் ஆராய்ச்சிகள் செய்தல் கூடாதா? புதிய ஒலி தரும் எழுத்துக்களைப் புகுத்தலோடு, தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைத்து— மாற்றங்களைச்செய்ய அறிஞர்கள் முயலுதல் முடியாதா? இவ்வாறு மாற்றங்களைச் செய்தால் மொழியின் 'கற்பு' பாதிக்கப் பட்டு விடுமா? இவ்வாறான குறைகள் எல்லா மொழிகளிலும் இருக்கின்றனவா? இவ்வாறான குறைபாடுகள்தான் அவ்வவ் மொழிகளின் சிறப்பம்சங்களா?

உங்களது ஆக்கபூர்வமான செயல் திறமையை நான் அறிவேன். தமிழ் நாட்டு, ஈழத்து — மொழியியல் அறிஞர்களை தூண்டுவதன் மூலம் தமிழ் எழுத்திலக்கணத் துறையில் தேவையான மாற்றங்களைச் செய்ய முயல்வீர்கள் என நம்புகிறேன்.

ருகம இ. யோ. கிறிஸ்ரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பியும் குத்தகைக் காணியும்

துரை. சுப்பிரமணியன்

கால்கள் இரண்டையும் நீட்டி ஒன்றுக்கு மேல் ஒன்ருய்ப் போட்டுக் கொண்டு கைகள் இரண்டையும் இறுகக் கோர்த்துத் தலைக்குக் கீழ் வைத்தபடி முகட்டை அண்ணுந்து பார்த்துக்கொண்டு கிடந்தான் சின்னத்தம்பி. வீட்டின் மூலையில் குப்பி விளக்கொன்று சாதுவாக எரிந்து கொண்டிருந்தது. அவனது கண்கள் நிலைகுத்தி முகட்டையே அண்ணுந்து பார்த்துக்கொண்டாலும், அன்று காலை பிரசவ நோக்காடு கண்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கும் அவனது மனைவி பொன்னம்மாவைப் பற்றியே நினைவுகள் இருந்தன.

பொன்னம்மாவுக்கு வெறும் கூப்பன் அரிசிச் சோற்றையும் தொட்டு நக்கிக் குடிக்கும் வெறும் தேனீரையும் தவிர வேறொன்றையும் பிரத்தியேகமா சின்னத்தம்பியால் கொடுக்க முடியவில்லை. இதனுல் அவள் மெலிந்து வெளிறி கண்களும் உள்ளுக்குள் தாண்டு போயிருந்தாள்.

'இந்தப் பிள்ளையை அவள் என்னெண்டுதான் பெத்தெடுக்கப் போருளோ?' என்ற கேள்வியும் 'எப்பிடியும் விடியிறதுக்கு முன்னம் பெத்திடுவாள்... பெத்தாலும் சில நேரம் இரத்தம் தேவை என்ருல் நான் ஆரட்டைப் போறது...... என்னிலையும் எங்கை இரத்தம் கிடக்கு... தற்செயலாக அவளுக்கு ஒண்டெண்டால், புள்ளையாரே...... நானும் இந்த ஆறு புள்ளையளும்", என்ற எண்ணங்களும் அவனது மனத்துள் மீண்டும் மீண்டும் ஓடி ஓடி வந்தன. அவனுக்கு இன்னும் நித்திரை வரவில்லை. அவன் கைகளை எடுத்துவிட்டு மறுபக்கம் புரண்டு படுத்தான். அப்பொழுதுதான் அவனது கடைசிப் பெண்குழந்தை தங்கமணி பாயில் மூத்திரத்தைப் பெய்துவிட்டு எழுந்திருந்து அழுதது. உடனே அவன் அந்தக் குழந்தையைத் தூக்கி தனது நெஞ்சின்மேல் கிடத்தித் தட்டி நித்திரையாக்கிக் கொண்டிருந்தான்.

பக்கத்து தண்டவாளத்தில் மூன்று தடவை அடித்துக் கேட்டது. மைமல் பொழுது வர இன்னும் இரண்டொரு மணித்தியாலங்கள் இருந்தன. சின்னத்தம்பியும் சாதுவாகக் கண்ணயர்ந்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

பொன்னம்மாவுக்குச் சிறிது பிரசவ நோக்காடு கண்டு அவள் ஆஸ்பத்திரிக் கட்டிலால் இறங்கி அடிவயிற்றை மெதுவாகத் தடவிக் கொண்டு அங்குமிங்குமாக நடந்தாள், அவள் அங்குமிங்குமாக நடந்துதிரிந்த பொழுது ஆஸ்பத்திரி யன்னலுக்கூடாக வந்த சோழகக் காற்று அவளுக்குச் சற்று இதமளித்தது. எனவே, அவள் யன்னலுக்கருகாமையில் வந்து ஒரு கையால் யன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு மற்றக் கையால் தனது அடிவயிற்றை மெதுவாகத் தடவிக் கொண்டாள். இப்படி அவள் யன்னலருகே நின்று பார்த்த பொழுது ஆஸ்பத்திரிக்குச் சற்று அப்பால் நின்ற பனை மரங்கள் சோழகக் காற்றுக்கு பேய்பிடித்தாடியது போல் அசைந்து சுழன்று ஆடின. அந்தப் பனைமரங்கள் அப்படி ஆடியதைக் கண்டதும் அவளுக்கு தனது வீட்டிற்குப் பின்னால் நிற்கும் இரண்டு உயர்ந்த பனை மரங்களின் நினைவுதான் வந்தது.

'ஐயோ புள்ளையாரே என்ரை குஞ்சுகள் என்ன பாடோ... தற்செயலாக அந்தப் பனையிலை ஒண்டு சரிந்தால்... ... குத்தகைக் காசும் நாலைஞ்சு மாசமாகக் குடுக்கேல்லை... குத்தகைக்காரனட்டை போய் பனை மரத்தை வெட்டச் சொன்னாலும் ஏசுவான். அந்தாளும்தான் என்ன செய்யிறது பாவம். உழைப்புப் பிழைப்பு ஒண்டுமில்லாமல் கிடக்குது. அந்தாளுக்கு உழைப்பிருந்தாலும் அந்தக் காசைக் கொண்டுபோய் எறிஞ்சு போட்டு அந்தப் பனையிலை இருக்கிற ஓலையைத் தன்னும் வெட்டச் சொல்லிப்போடும். அதுக்குமொரு வழியுமில்லை......' இப்படிப் பொன்னம்மா நினைத்துக் கொண்டிருந்த பொழுது அடிவயிற்றில் சற்று ஊன்றிக் குத்தவே 'உச்.. ச்ச்...' என்று வலி தாங்க முடியாது குனிந்து அடிவயிற்றைப் பிசைந்தாள். அப்பொழுது அவளைக் கடந்து போன மருத்துவச்சி,

'நல்லாக் குத்தெழும்பட்டுக்கும், நட நட நடந்து திரி. கம்பியிலை பிடிச்சுக் கொண்டு ஒரு இடத்திலை நிக்காதை. அஞ்சாறைப் பெத்துப்போட்டு கன்னிப் புள்ளைத்தாச்சி மாதிரி நிக்கிறாய். இது எல்லாம் சொல்லியே தாறது, நடந்து திரி......'

பொன்னம்மாவுக்கு மருத்துவிச்சி சொன்னது ஒருவகையில் சரியாகப் பட்டாலும் அவள் சொன்னவிதம் பிடிக்கவில்லை. பொன்னம்மாவின் கட்டிலுக்கு சற்று அப்பாலுள்ள போஸ்ட் மாஸ்டரின் பெண்சாதி, டி. ஆர். ஓவின் பெண்சாதிமாரோடு மிகவும் மரியாதையாகக் கதைத்தாள். தான் சிறிது வறுமைப்பட்டதுதான் இதற்குக் காரணம் என்று நினைத்தாள்.

பொன்னம்மாவின் அனுபவத்தின்படி இன்னும் அரை மணித்தியாலத்தில் தனக்குக் குழந்தை பிறந்து விடுமென்று தெரிந்தது. குத்து வர வர அதிகரிக்கவே கீழ் உதட்டைக் கடித்து வலியைப் பொறுத்துக்கொண்டு மெல்ல மெல்லவாக தனது கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டாள்.

# 3

பொழுது நன்றாகப் புலர்ந்ததும் சின்னத்தம்பி எழுந்து கோப்பி வைக்கக் குசினுக்குள் சென்றான். சென்ற பொழுது அவனது மூன்றுவயதுக் குழ்ந்தை தங்கமணியும் எழுந்து அழுது கொண்டு அவனுக்குப் பின்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது. அவனுக்கு ஆஸ்பத்திரிக்குப் போக நேரமாகினதினால், பிள்ளை எழுந்து அழுதது சினமாக இருந்தது. இருந்தும் அடிகொடுக்க மனமில்லாததால் அந்தக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு போய் குசினிக்குள் விட்டுவிட்டு கோப்பியை வைத்தான். இதற்கிடையில் அவனது மூத்த மகன் துரைசிங்கம் எழுந்து வெளியில் வந்தான். அவனிடம் அந்தக் குழந்தையைக் கொடுத்துவிட்டு வைத்த கோப்பியை ஒரு போத்தலுக்குள் ஊற்றிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக ஆஸ்பத்திரிக்குப் போனுன். ஆனல் அவன் போவதற்கு முன் மணி அடித்து நோயாளர்களைப் பார்க்கப் போனவர்கள் எல்லாம் திரும்பிக் கொண்டிருந்தார்கள். சின்னத்தம்பி ஒருவாறு காவல்காரனை மன்றாடி 'ஐயா' போட்டு பொன்னம்மாவைப் பார்க்கச் சென்றுவிட்டான்.

பொன்னம்மா அப்பொழுது தான் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றுக்கொண்டு வந்து கிடத்தப்பட்டிருந்தாள். சின்னத்தம்பியைக் கண்டதும் மனத்தில் ஓர் தென்பு வந்தது. சந்தோசத்தில் பக்கத்தில் கிடத்தியிருந்த ஆண் குழந்தையைத் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது அவளுக்கு சின்னத்தம்பின் சாயல் குழந்தையில் தெரிந்தது.

சின்னத்தம்பி தான் கொண்டுபோன கோப்பியை மூக்குப் பேணியில் வார்த்துப் பொன்னம்மாவுக்குப் பருக்கினுன். கோப்பியைக் குடித்ததும் பொன்னம்மாவுக்குச் சாதுவாகக் கதைக்கலாம் போல இருந்தது. எனவே அவள்,

'பிள்ளையள் என்ன செய்யுதுகள்? சின்னவள் அழேல்லையே வரப்போறன் எண்டு......'

'அவள் அழுதவள்தான். அவளைப் பெரியவனேடை விட்டுட்டு வந்தனுன். அவனைப் பள்ளிக்குப் போகாமை நிப்பாட்டிக் கிடக்கு'

'கூப்பன் எடுத்ததே'

'இன்னும் எடுக்கேல்லை...... போய்தான் மாறிச்சாறிப் பாப்பம்'

குத்தகைக்காரன் வந்தவரே. வந்தால் அந்தக் கோடிக்குப் புறத்தாலை நிக்கிற பனையிலை இருக்கிற ஓலையளை ஆவுதல் வெட்டிவிடச் சொல்லுங்கோ. அல்லாட்டி பனையைத் தறிச்சு விடச் சொல்லுங்கோ. உந்தக் காத்துக்குப் பனையள் ஆடுற ஆட்டத்தைப் பார்க்கப் பயமாகக் கிடக்கு'

'குத்தகைக்காரன் என்னை வரச்சொல்லி ஆள் அனுப்பி இருக்கிருர். போனல் சொல்லுறன்'— இப்படிக் கதைத்துக் கொண்டு நிக்கிற பொழுது ஒரு கங்காணி வந்து,

'ஏய், மணி அடிச்சு இவ்வளவு நேரமாப் போச்சு உனக்கு பொண்டிலை விட்டுப் போக மனமில்லையே. கெதியாப் போ...... பெரிய டாக்குத்தர் வரப்போறுர்' என்றுன்.

சின்னத்தம்பி அதற்குமேல் அங்கு நிற்கமுடியாதவனுக குழந்தையை மீண்டும் ஒரு தடவை பார்த்துவிட்டு வீடு திரும்பினுன்.

## 4

சின்னத்தம்பி திரும்பி வரும் பொழுது காணிக் குத்தகைக் காரனைப் பார்க்க வேண்டுமென்று, குத்தகைக்காரன் வீட்டிற்குச் சென்றுன். கோயில் காணியைக் குத்தகைக்கு விட்டு கோயிலைப் பராமரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை பிள்ளையார்கோவில் மனேச்சரான சுந்தரம்பிள்ளை ஏற்றுக் கொண்டார். இந்தப் பொறுப்பை அவர் கடந்த இருபத்தைந்தோ முப்பது வருடங்களாகக் கவனித்து வருகிருர். பஞ்சுபோல நரைத்த தலை. ஆஜானுபாகுவான தோற்றம். கண்ணில் கண்ணுடி. கையில் ஓர் தடி. கோயில் 'மனேச்சர்' என்ற பெருமையைக் காட்டும் கம்பீரமான நடை. சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளையைக் காணப் போனபொழுது அவர் சாய்மனேக் கட்டிலிலிருந்து அன்றையத் தினசரிப் பத்திரிகையொன்றைப் படித்துக் கொண்டிருந்தார்.

சின்னத்தம்பி கிட்டப்போய் துவாயை எடுத்து அரையில் சுட்டிக் கொண்டு, குழைவாக, 'ஐயா' என்ருன்.

சத்தம் கேட்டு, தினசரியை மேசைமேல் வைத்துவிட்டு, 'ஆர் சின்னத்தம்பியோ......'

'ஓமய்யா'

'குத்தகைக் காசு கொண்டு தந்திருக்கிருய் போலை'

'இல்லை ஐயா இந்தமுறை...'

'என்ன இண்டைக்கும் கொண்டு வரேல்லையே, இப்ப எத்தினை மாதம். இனி எனக்குத் தவணை சொல்லவேண்டாம்'

'இல்லை ஐயா, எனக்கு இப்ப கொஞ்சநாளா உழைப்புப் பிழைப்பு இல்லை ஐயா. கூப்பன் எடுக்கக் கூடத் தட்டுப்பாடாய்க் கிடக்கு. அவளும் புள்ளைப் பெத்துக்கொண்டு கிடக்கிருள்'

'அதுக்கு நான் என்ன செய்யிறது. நீ உந்த வளவுக்குள்ளை பதினைஞ்சு இருபது வருசம்இருந்திட்டாய் எண்டு பார்க்கிறன். உந்த வளவைக் கூடின குத்தகைக்குக் கனபேர் கேக்கினம். இனிமேல் பொறுக்க ஏலாது. இண்டைக்குச் சனி. சனியோடை சனி எட்டு. அடுத்த ஞாயிற்றுக் கிழமைக்கிடையிலை குத்தகைக் காசைக் கொண்டுவந்து கட்டிப் போடு வேறை கதை வேண்டாம். முடியாதெண்டால் நீ காணியை விட்டு எழும்பு'

'இல்லை ஐயா ஒரு இரண்டு மாதம் பொறுத்துக் கொள்ளுங்கோ. புள்ளையாருக்கும் என்ரை கஷ்டங்கள் தெரியும்'

'என்னப்பா நளினமே விடுகிருய். வேறைகதை வேண்டாம். அடுத்த ஞாயிற்றுக் கிழமைக்கு முதல் எனக்குக் காசு வேணும்'

சின்னத்தம்பி மேலும் அங்கு நின்று குழைந்து கைகளைப் பிசைந்தான்.

'வேறை என்ன போட்டு ஞாயிற்றுக்கிழமை வா......'

'ஐயா அந்த கோடிப்புறத் தாலை நிக்கிற பனையள் இரண்டாலையும் பயமாக் கிடக்கு. இந்தக் காத்துக்கு ஆடுற ஆட்டத்தைப் பார்த்தால் வீட்டுக்கு மேலை விழுந்திடும் போலைக் கிடக்கு. குழந்தை குஞ்சுகள் ஓடி ஆடித் திரியிற இடமய்யா. அந்தப் பனை இரண்டையும் தறிப்பிச்சு விட்டீர்கள் எண்டால்......'

'என்ன பனையைத் தறிக்கிறதோ? ஓகோ நீ குத்தகைக் காசும் தரமாட்டாய் இருக்கிற பிரயோசனத்தையும் தறிச்சுக் கொட்டச் சொல்லுருய். நீ நல்ல ஆளப்பா. அது கள்ளுக்குக் குடுக்கிற பனை. அது தறிக்கேலாது'

'அந்த ஓலையளை ஆவுதல் வெட்டி விட்டால்......'

'ஓலையள் என்னெண்டு இப்ப வெட்டுறது. இப்ப ஒரு தரும் ஓலை வெட்ட வரமாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாங்கள். நீ போய்க் காசைக் கொண்டு வா... பிறகு பாப்பம் ஓலை வெட்டுறதை' என்று கூறி விட்டு மீண்டும் பத்திரிகை படிக்க ஆரம்பித்துவிட்டார் சுந்தரம்பிள்ளை.

சின்னத்தம்பி மிகவும் மன வேதனையோடு வீட்டிற்கு வந்தான்.

## 5

பொன்னம்மாவுக்குச் சற்றுப் பெலவீனமாக இருந்ததால் மூன்றாம் நாள் துண்டு வெட்டாது ஐந்தாம் நாளே துண்டு வெட்டப்பட்டது. கார் பிடிக்கக் காசு போதாத படியால் றிக்ஷோவில் பொன்னம்மாவையும் பிள்ளையையும் ஏற்றிவிட்டு அவன் ஆஸ்பத்திரியிலிருந்து மூன்று மைல்வரை நடந்து வந்தான்.

இரண்டு நாள் வேலி அடைக்கப் போன கூலியைக் கொண்டு கூப்பன் அரிசியையும் மாவையும் வாங்கி பொன்னம்மாவுக்கு இரண்டு மூன்று நாள் சோறு ஆக்கிக் கொடுத்தான். அதன் பின்பு அரிசி தீர்ந்து போகவே கோதம்பை மாவில் பிட்டு அவித்துக் கொடுத்தான். அதும் தீர்ந்து போகவே இரண்டு நாட்களாக எல்லோரும் பட்டினி கிடந்தார்கள்.

'பச்சைப் பிள்ளைத்தாச்சி' பட்டினியாகக் கிடக்கின்றாள் என்றதைச் சின்னத்தம்பியால் பொறுக்க முடியவில்லை. அவன் தனது துவாயைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு எங்கோ புறப்பட்டுவிட்டான்.

அடுத்த ஞாயிற்றுக் கிழமைக்கு முதல் குத்தகைக் காசு கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் மனத்தை நெருடிக் கொண்டிருந்தாலும் பொன்னம்மாவும் பிள்ளைகளும் பட்டினியாகக் கிடப்பதுதான் அவனுக்குப் பொறுக்க முடியவில்லை.

அன்று சாயந்திரம் திரும்பி வரும்பொழுது கையில் கறி உமலும் மடியில் காசு பத்து ரூபாவும் இருந்தது.

இப்பொழுது பொன்னம்மா சிறிது எழுந்து நடக்கத் தொடங்கினாள். ஆனால் சின்னத்தம்பி தான் அனேகமான குசினி வேலைகளை வேலைக்குப் போகமுன்போ அல்லது வேலையால் வந்தோ கவனிப்பான்.

பொன்னம்மாவுக்குத் துணையாக அவளது மூத்த மகன் துரைசிங்கம் இருக்கின்றான். அவன் இன்னும் பள்ளிக்கூடத்திற்கு மீண்டும் போகத் தொடங்கவில்லை.

## 6

ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் பொன்னம்மாவுக்குச் சாடையான காய்ச்சலோடு உச்சிக் குத்தும் இருந்தது. 'சுவாதம்' வந்து விட்டதோவென்று சின்னத்தம்பி பயந்து கொண்டிருந்தான். அவன் கிட்டத்தட்ட மூன்றரை நான்கு மைல்வரை நடந்து போய் ஆயுள் வேதப் பரிகாரியாரிடம் மருந்து வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தான்.

பொன்னம்மா வீட்டிற்குள் படுத்துக் கொண்டிருந்தாள்.

திங்கட்கிழமை சாயந்திரம் ஆறு மணிபோல் குத்தகைக் காசு வாங்குவதற்காக சுந்தரம் பிள்ளை சின்னத்தம்பியின் வீட்டிற்கு வந்தார்.

சுந்தரம்பிள்ளையைக் கண்டதும் நாய் 'அவக், அவக்' என்று குரைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்குள் படுத்திருந்த பொன்னம்மா மூத்த மகனைக் கூப்பிட்டு ஆர் வந்திருக்கின்ற தென வினவினுள்.

அவர் 'கோயில் மனேச்சர் ஐயா' குத்தகைக் காசுக்கு வந்திருப்பதாகச் சொன்னுன்.

காய்ச்சலும் உச்சிக்குத்தும் சற்றுக் குறைவாக இருந்ததால் பொன்னம்மா வெளியில் வந்து கப்போடு சாய்ந்து கொண்டிருந்தாள்.

'எங்கை சின்னத்தம்பி'— சுந்தரம்பிள்ளை கேட்டார்.

'அவர் எங்கயோ போட்டார்'

'குத்தகைக் காசுக்கு என்னவாம்?'

'குத்தகைக் காசு இப்ப இல்லை ஐயா, பொறுத்த தோடை இரண்டு மாதம் பொறுங்கோ. இப்ப கொஞ்சம் கஷ்டமாகக் கிடக்கு'

'கஷ்டம் எல்லாருக்கும்தான் இருக்கு. இனி எனக்குத் தவணை வேண்டாம். இந்த மாதத் தோடை நீங்கள் வேறை எங்கையும் இடத்தைப் பாருங்கோ. எனக்குக் காசு வேணும்'

'இல்லை ஐயா, இவ்வளவு காலமும் நாங்கள் நாணயமாகத் தரேல்லையே. இப்ப கொஞ்சம் கஷ்டம் வந்திட்டுது.

'எனக்கு வேறை தவணை வேண்டாம். நீங்கள் இடத்தை விட்டால் போதும்'

'ஐயா, அந்த உயரிப்பனையள் இரண்டாலையும் இராப்பகலா எங்களுக்குப் பயமாக இருக்கய்யா. பனையைத் தறிக்க ஏலாதெண்டால் ஓலையாவுதல் வெட்டிச்சு விடுங்கோய்யா......' என்ரை குழந்தை குஞ்சுகள் ஓடி ஆடி விளையாடுறதுகள்.

'பனை என்னெண்டு தறிக்கிறது. அது கள்ளுக்குக் குடுக்கிற பனையள். நீங்கள் குத்தகைக் காசும் தரமாட்டியள். உள்ள பிரயோசனத்தையும் அழிக்கச் சொல்லி நிக்கிறியள். அது இப்ப ஒண்டும் செய்ய ஏலாது. வேணும் எண்டால் வேறை இடத்தைப் பாருங்கோ'

அப்பொழுதுதான் சின்னத்தம்பி எங்கோ வேலைக்குப் விட்டு களைத்துப்போய் வந்தான். சுந்தரம்பிள்ளை கடைசியாகப் பேசியவை அத்தனையும் அவன் காதில் தெளிவாக விழுந்தன. படலையைத் திறந்ததும் சுந்தரம்பிள்ளை முற்றத்தில் நிற்பதையும் பொன்னம்மா கப்போடு சாய்ந்திருப்பதையும் கண்டான்.

சின்னத்தம்பியைக் கண்ட சுந்தரம்பிள்ளை, 'குத்தகைக் காசுக்கு என்ன முடிவு' என்ருர்.

'காசு இப்ப கையில இல்லை. உந்தப் பச்சைப் பிள்ளைத்தாச்சியும் குழந்தைகளும் இண்டு முழுக்கப் பட்டினி கிடக்குதுகள். காசிருந்தால் வைச்சுக்கொண்டு சும்மா இருப்பனே' அவன் வழக்கமாக உபயோகிக்கும் மரியாதைப் பதமான 'ஐயா' வை வேண்டுமென்றே தவிர்த்துக் கொண்டான்.

'நான் உதுகள் கேக்க வரேல்லை, காசுதான் கேட்க வந்தனுன்'

'காசு இல்லை......'

'குத்தகைக்காசு குடுக்கேலாது அவருக்கொரு குடும்பம் புள்ளைப்பெறு... ச்சீ... வெட்கம் இல்லை'

இந்த ஏச்சைக் கேட்டதும் சின்னத்தம்பியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவனுக்குக் கோபம் சீறிக்கொண்டு வந்தது.

'இனி நான் எடாப்புடாப் பாசைதான் பேசுவன். மரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையாகச் சொல்லுறன் காசு இப்ப இல்லே. இரண்டு மாதம் கழிச்சுத்தான் தருவன்......'

'உன்னைப் போல போக்கிலி ஆர் இருக்கினம். குத்தகைக் காசு குடுக்க ஏலாது, அவருக்கு ஒரு புள்ளேயும் பெறவேணும். ச்சீ தூப். நானெண்டால் இப் பிடிச் சீவிக்கிறதிலும் பார்க்க தூங்கிச் செத்துப் போடுவன் ச்சீ... மானம் கேட்ட சீவியம்'

சின்னத்தம்பிக்குக் கோபத் தால் கண்கள் சிவந்து கைகால் கள் பதறின. தோளில் போட் டிருந்த துவாயை சுழட்டி எறிந் துவிட்டு ஆவேசமாக ஓடிப் போய் கோடாலியை எடுத்துக் கொண்டு வந்தான். பொன்னம் மாவும் பிள்ளேகளும் "ஐயோ" என்று சத்தமிட்டுக் கத்திஞர் கள். இந்தச் சத்தத்திற்கு அய லவர்கள் வந்து கூடி, அதில் ஒருவன் சின்னத்தம்பியைப் பிடித்தான். அவன் திமிறிக் கொண்டு கோடரியைக் காட்டி,

'டேய் நீ ஆரடா என்ரை மானம் வெட்கம் கேக்கிறதுக்கு. என்ரை புள்ளேகுட்டியளே உன் னட்டை ஒருநேரச் சோத்துக்கு அனுப்பினனுேடா. மாசம் மாசம் அள்ளித்தந்தநானடா... இனி உனக்கு காசு இல்லேயடா. காசு தரமாட்டன் எண்டால் தரமாட்டன். வெட்டித் துலேப் பனடா உன்னே. எங்களே மிரு கங்கள் எண்டு நினேச்சியோடா. கோயில் வளவிலே உனக்கு அவ் வளவு ஆதிக்கமோ. டேய் இந் தக் காணி இனி எனக்கடா... இனிமேல் ஒரு வெள்ளேச் சல்லி என்னட்டை வாங்குவியாடா... போடா வெளியிலே'

'ஓமடா...... போக்கிலிகள் வேறை என்னண்டடா சொல் லுவாய்'

'என்னடா போக்கிலியோ. என்னே விடு. ஆர் சிதம்பரியண் ணேயோ... என்னே விடு. நானும் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்த்தன். ஆரடா போக்கிலி. இந்தப் பனேயை ஒருக்காத் தறிச்சு விடு அல்லது ஓலேயா வது வெட்டி விடு எண்டு எத் தனே தரம் மன்ருடிக் கேட்டன். அதுக்கு அவர் சொன்ன பதில் கள். டேய் என்னேக் கொலே காரன் ஆக்காதை, போடா வெளியிலே. சிதம்பரி அண்ணே என்னே விடு' சின்னத்தம்பி திமிறிஞன்.

'நீ போடா வெளியிலே'

'இந்தக் காணி எனக்குச் சொந்தம். நீ போய் வழக்குப் போடடா.

'ஓ... நீயும் இதுக்கை இருக் கத்தான் போருய். உனக்கும் ஒரு எண்ணமோடா'

'டேய் இது என்ரை காணி யடா, என்ரை காணி. சின்னத் தம்பியனுக்குச் சட்டம் தெரியா தெண்டுநினேச்சியோடா. நானும் பேப்பர்படிக்கிறஞனடா. என்னே உசுப்பேலாதடா' சின்னத்தம்பி தனது நெஞ்சில் தட்டி உரக்கக் கத்திஞன்.

இப்படி இருவரும் ஏச்சுப் பட்டுக் கொண்டிருக்கும்போது சுந்தரம்பிள்ளேயை யாரோ கூட்டிக்கொண்டு போஞர்கள். அதே நேரத்தில் பொன்னம்மா வந்து சின்னத்தம்பியை இழுத் துக்கொண்டு போனுள்.

சின்னத்தம்பி தனது நெஞ் சில் தட்டி 'இது என்ரை காணி யடா, என்னே உசுப்பேலாதடா' என்று சொல்லி கோடரியையும் ஓங்கிப் பிடித்துக் கொண்டு நின்ற காட்சி சுந்தரம்பிள்ளே யின் மனத்தை விட்டுப் போக மறுத்தது.

இரண்டு நாட்களின் பின் பனேதறிக்கும் சத்தம் சின்னத் தம்பியின் வீட்டுப்பக்கத்திலி ருந்து மிகவும் தெளிவாகச் சுந்தரம்பிள்ளேக்குக் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாவலும் தத்துவங்களும்

மனோன்மணி சண்முகதாஸ்

தமிழில் நாவல் என்ற வடிவம் தோன்றி ஒரு நூற்றாண்டினைக் கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அந்த வடிவத்தினைப் பற்றிப் பல்வேறு கோணங்களிலும் ஆராய்ந்து அதற்கொரு தகுதியான இடத்தினைத் தமிழிலக்கிய வரலாற்றுப் பரப்பிலே அளிக்க வேண்டுவது இன்று அவசியமெனக் கருதப்படுகிறது. ஆங்கிலக் கல்வியினால் தமிழிலே வந்து புகுந்த வடிவமாக இது விளங்கிய போது தமிழ் வடிவில் சில தனித்துவங்களையோ அன்றேல் பொதுமைப் பண்புகளையோ கொண்டமைந்திருக்கின்றதா என்ற ஆய்வொன்றினை மேற்கொள்ளுவதன் மூலம் ஒரு நூற்றாண்டுத் தமிழ் நாவல்களை மதிப்பிட்டு விடுவதும் சுலபமாகின்றது.

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மைப் பொருள் என்பது கருத்து. உண்மைப் பொருள்களிலிருந்து உண்டாகும் காரியங்களிலும் அந்த உண்மைப் பொருள் வியாபித்து நிற்பதனால் அக்காரியங்களும் தத்துவம் என்றழைக்கப்படுகின்றன. உலக தத்துவங்கள் அனைத்தையும் இரு பகுப்புக்குளடைக்கலாம். ஒன்று பொருள்முதல்வாதம் மற்றது கருத்து முதல்வாதம். இதுவே ஆன்மீக வாதம் என்றழைக்கப்படுவது. பிரபஞ்சமும் இயற்கை ஆற்றலும் உயிர்களும் எல்லாம் பொருள்களின் சேர்க்கையாலும் மாறுபாடுகளாலும் நிலைபேறு கொண்டியங்குகின்றன. இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையின் அடிப்படையான அம்சம் பொருளே என்ற எண்ணமே உலகாயுதம். இதற்குமாறாக பிரபஞ்சத்தின் நிலைபேறு இயக்கம் இவற்றிற்குக் காரணம் பொருளின் வேறுபட்ட ஒரு ஆற்றல் — அது பொருளிற்கு முன்னரே இருந்தது. அதனை ஆன்மா, பரிபூரணம், கருத்து. பிரமம், புருஷன், கடவுள் என்று பல பெயர்களைச் சொல்லி அழைக்கிறார்கள். இது ஆன்மீக வாதம்.

இதனால் தத்துவம் என்பது நம்மைச் சுற்றி நிலவும் யதார்த்தம் பற்றி முழுமையாகவும் மனிதனால் அது அறியப்படுதல் பற்றியும் உள்ள கருத்துக்களின் தொகுப்பாகவே விளங்குவதைக் காணலாம். இன்னும் பல்வேறு சமூக வர்க்கங்கள் குழுக்களின் நலன்களை வெளியிடுவதாகவும் அது அமைகின்றது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுக்கும் இருத்தலுக்கும், ஆன்மாவுக்கும், இயற்கைக்கும் இடையே நிலவும் உறவுபற்றிய பிரச்சினையே தத்துவத்தின் அடிப்படைப் பிரச்சினையாகவும் அமைகின்றது. இதனை ஆராய்கையில் அதன் அம்சங்களை இரண்டாக வேறுபிரித்துக் காண்பது முக்கியமானதாகும். ஒன்று கருத்தினாலானதா அல்லது பொருளினாலானதா என்ற கேள்விக்கு விடைகாண்பது. மற்றது புறநிலை யதார்த்தத்தைச் சரியாகப் பிரதிபலித்தற்கு மனிதனது சிந்தனைத் திறமை கொண்டுள்ள வல்லமையினை விளக்குவதாகும்.

கலை சமூகத்தின் பரந்த ஆன்மீக வாழ்வுத்துறையாக விளங்குகிறது. புனைவு இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம், ஆடற் கலை, மன்றக்கலை, திரைப்படம் முதலியன இதனைச் சார்ந்தவையாகும். யதார்த்தத்தின் அம்சங்களான இயற்கைக் காட்சி, சமூக வாழ்க்கைச் சம்பவங்கள், மனித இயல்பு முதலியவற்றில் எதை எடுத்துக் கொண்டாலும் சரியே யதார்த்த நிகழ்வுகளில் அழகியற் பண்பைப் புலப்படுத்துவதே கலையின் முக்கிய நோக்கமாகும். குறித்த சமுதாய அழகியல் ஆதர்சத்திற்குப் பொருந்த இந்த நிகழ்ச்சிகளை அழகியல் நோக்கில் புரிந்து கொள்ளவும் மதிப்பிடவும் கலை எமக்குத் துணை செய்கின்றது. இவ்வாறு யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதன் காரணமாகக் கலை சமூக உணர்வின் மற்றைய வடிவங்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. இயற்கையையும் சமூகத்தையும் விஞ்ஞானம் கருதுகோள்களின் வடிவிலும் விதிகளின் வடிவிலும் பிரதிபலித்துக் காட்ட, கலை அவற்றைக் கற்பனைப் பாத்திரங்களின் வடிவில் பிரதிபலித்துக் காட்டுகின்றது. இதனாற் சுற்றியுள்ள நிகழ்ச்சிகளில் அவற்றின் உள்ளார்ந்த சாரத்தன்மையினைக் காணவும் அவற்றின் அழகியற் பண்புகளை மதிக்கவும் அவற்றால் இன்பத்தினைப் பெறவும் கலை கற்பிக்கின்றது. வாழ்க்கை பற்றிய அறிவால் மக்களை வளப்படுத்துவது மட்டுமன்றி அவர்களது செயல்களையும் அது உரிய திசையில் திருப்பி விடுகின்றது. இதனால் அவர்களுக்கென ஒரு பிரபஞ்சக் கண்ணோட்டமும் உருவாக வழியேற்படுகிறது. சமூகத்தின் தேவைகளுக்கேற்ப மக்களைப் பயிற்றுகின்றது.

கலைஞன் முற்போக்குக் கருத்துக்களை மேற்கொண்டிருந்து உயர்ந்த தேர்ச்சியும் பெற்றிருத்தல் உண்மையைச் சித்தரிக்கும் ஆழ்ந்த கலைச்சிருஷ்டியை அவனால் படைக்க முடிகின்றது. பிரபஞ்சத்தை அறிந்து கொள்ள அது மக்களுக்கு உதவுகின்றது. குறிப்பிட்ட கற்பனைப் பாத்திரங்கள் வாயிலாக நாம் ஸ்தூல வரலாற்றுச் சூழ்நிலையையும், சமூக உறவுகளையும், அரசியல் அக்கறைகளையும், மனிதர்களின் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் முன்னிலும் ஆழமாகவும் முழுமையாகவும் புரிந்து கொள்கின்றோம்.

இத்தகையதொரு தத்துவப் பின்னணியிலேயே தமிழ் நாவல்களை வைத்துப் பார்ப்பது பொருத்தமானதும் காலத்துக்கேற்ற ஆய்வாகவும் அமையும். இதுவரை தமிழிற் தோன்றிய நாவல்கள் இத்தத்துவப் பின்னணியினை எவ்வளவு தூரம் தம்முள் அடக்கியுள்ளனவென்பதை ஆராயுமுகமாக அவற்றின் பண்புகளை இணைத்துப் பார்க்குமிடத்துத் தத்துவத்தின் இரு பெரும் பிரிவுகளான கருத்துமுதல் வாதத்தினையும் பொருள்முதல் வாதத்தினையும் பிரதிபலித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்ற படைப்புக்களை நாம் இனங்கண்டு கொள்ள முடி கின்றது. இவ்வாறு அவற்றினை இனங்கண்டு கொள்வதற்குத் தமிழ் நாவல்களை வரலாற்று நாவல்கள் என்றும், சமூக நாவல்களென்றும் இரு பிரிவி னுள்ளடக்கி இணைத்துப் பார்ப் பதுவே இலகுவானதும் விளக்க மானதுமாகும்.

## வரலாற்று நாவல்கள்

தமிழ் வரலாற்று நாவல் களின் பண்புகளை எடுத்தாராயு மிடத்து அவை பெரும்பாலும் கருத்துமுதல் வாதப் பிரிவுடன் தொடர்புடையனவாகவே அமையுந் தன்மை பெற்றுள்ளன. ஏனெனில் தமிழ் வரலாற்று நாவல்களின் தன்மையை அவை எழுந்த காலத்து இலக்கிய சமூ கச் சூழ்நிலைகள் பெரிதும் பாதித் தன. தமிழ் வரலாற்று நாவல் களுக்கு ஒரு வடிவம் கொடுத் தவர் 'கல்கி' யாகும். அவர் காலச் சூழ்நிலை பழங்காலத்தைச் சமகாலத்தின் நோக்கிலிருந்து காண வேண்டியதொரு சூழ்நிலை யாக இருந்தது. இதனால் அவ ரது நாவல்களில் கருத்துமுதல் வாதத்தின சாயைதான் அதிக மாகப் படரமுடிந்தது. இதற்கு அக்காலத்திற் தோன்றிய வர லாற்றுணர்வும் ஒரு காரணமாக அமைந்தது. கல்கி இலக்கிய உலகிற்கு அறிமுகமான நேரம் தேச விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டி ருந்த காலமாகும். இதுவே கல்கியை பழமையை நோக்கித் திரும்பச் செய்தது. ஆனந்த விகடனில் அவர் எழுதிய தியாக பூமி என்ற நாவலின் தோற்ற மாகவும் அமைந்தது. அவரது ஏனைய நாவல்களான சிவகாமி யின் சபதம், பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், மகுட பதி யாவும் இந்தப் பின்னணி யிலேயே எழுதப்பட்டன.

கல்கியால் தொடக்கப்பட்ட தமிழ் வரலாற்று நாவல்கள் அவர் காலத்திற்குப் பின்பும் பிரபலமாயமைந்தன. கல்கியின் காலத்திருந்த சாண்டில்யன் அவ ருக்குப் பிற்பட்ட மி. ப. சோம சுந்தரம், அகிலன், விக்ரமன், கோ. வி. மணிசேகரன், அரு. இராமநாதன், நா. பார்த்தசா ரதி போன்ற ஆசிரியர்கள் ஏரா ளமான வரலாற்று நாவல்களை எழுதினர். வரலாற்றுக் கண் ணோட்டத்தில் அவர்களனைவரும் கல்கியுடன் ஒற்றுமைப் பட்ட வர்களாகவே அமைகின்றனர். அகிலனின் 'வேங்கையின் மைந் தன்', ஜெகசிற்பியனது 'திருச் சிற்றம்பலம்', சோமுவின் 'கடல் கண்ட கனவு' என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

திராவிடர் இனவெறி உணர்வை வடவரது எதிர்ப்புக் கொள்கைக்குப் பொருத்தமாக உபயோகப்படுத்தி ஆசைத் தம்பி, சிற்றரசு, இராதாமணு ளன், கலைஞர் கருணாநிதி, அறி ஞர் அண்ணாதுரை ஆகியோர் எழுதினர் இதைவிட ஆண்மை நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு பார்த்தசாரதியின் 'ஆத்மாவின் ராகங்கள்', ர. சு. நல்லபெருமாளின் 'கல்லுக்குள் ஈரம்' போன்ற நாவல்கள் வெளிவந்துள்ளன. இவ்வர லாற்று நாவல்கள் எதிலுமே கலைத்துவத்தினைக் காணமுடிய வில்லை இதற்கு முக்கிய காரண மாக இவ்வாசிரியர்கள் ஒரு தத் துவப் பின்னணியான தன்மை யைக் கூறலாம்.

## சமூக நாவல்கள்

தமிழ் நாவல்களில் சமூக நாவல்கள் ஏராளமாக இந்நூற் றூண்டுக் காலப்பகுதியில் எழுந் திருக்கின்றன. ஆண்டாண்டு காலமாக நிலவுடைமைத் தேக்க நிலையிலிருந்து வந்த தமிழகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் வெள்ளையர் வரவால் புதிய உறவுகளால் எழுந்த சமுதாய பொருளாதார அமைப்பு மாறத் தொடங்கியது. புது அமைப்பு தமிழ் மக்கள் சிந்தனையை மாற்றத் தொடங்கியது. இம்மாறுதலின் விளைவாக பழைய சமூக அமைப்பின் சிந்தனைக் கூற்றின், ஒரு பகுதியாக விளங்கிய இலக்கியத் துறையில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றியது தமிழ் நாவலாகும். இது ஆரம்ப காலத்திலிருந்தே மத்திய தர வர்க்கத்தினரால் வளர்க்கப் பட்டது.

இத்தகையதொரு கருத்துப் பின்னணியில் சமூக நாவல்களை வைத்து நோக்குமிடத்தில் அவற்றில் சரியான விளக்கமற்ற தத்துவப் பின்னணியே அமைவதைக் காணமுடிகின்றது. ஆரம்ப காலச் சமூக நாவலான 'கமலாம்பாள்' சரித்திரத்தின் ஆசிரியர்,

> "இவ்வுலகில் உழன்று தவிக்கும் ஒரு அமைதியற்ற ஆத்மா பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக் கடைசியாக நிர்மலமான ஒரு இன்ப நிலை அடைவதே இந்த நவீனத்தின் முக்கிய நோக்கம்"

என்று கூறுவது சிந்தனைக்குரியது. நாவலில் சித்தரிக்கின்ற யதார்த்தம் அத்துவைதக் கொள்கையிலிருந்து வேறுபடுகிறது. இதனால் ஆசிரியரது கருத்துலகக் கண்ணோட்டத்திற்கும் கதை நடப்பிற்குமிடையே முரண்பாடு காணப்படுகின்றது.

தமிழ் நாவல்களுள் பிற்காலத்தில் எழுந்த சமூக நாவல்களிற் கூடத் தத்துவப் பின்னணியை முழுமையாகக் காண முடியவில்லை. இதற்குக் காரணமாக இப் பொருள்முதல் வாதக் கருத்துக்கள் பற்றிய அறிவு போதுமான அளவு வளர்ச்சியடையாமை முக்கியமெனலாம்.

சமகாலச் சமூக நாவல்களது சில படைப்புக்களை எடுத்து நோக்கும்போது இதனைக் காண முடிகின்றது. சமகால எழுத்தாளர்களான இந்திரா பார்த்தசாரதி, நீல பத்மநாதன், ஜெயகாந்தன், கிருத்திகா, ராஜம் கிருஷ்ணன் போன்றோரது நாவல்களில் பொருள்முதல் வாதக் கருத்துக்களின் சில பண்புகளை இடையிடையே காணமுடிகின்றது. இக் கருத்துக்களைப் புலப்படுத்த இவ்வாசிரியர்கள் தங்கள் படைப்புக்களை நடப்பியற் சித்திரங்களாகப் படைக்க முற்பட்டுள்ளனர். இவ்வகையில் இந்திரா பார்த்தசாரதியின் 'தந்திர பூமி', நீல பத்மநாதனின் 'தலைமுறைகள்', ஜெயகாந்தனின் 'பாரீசுக்குப் போ', ராஜம் கிருஷ்ணனின் 'ரோஜா இதழ்கள்' என்பவற்றைக் குறிப்பிடலாம். பெண் எழுத்தாளர்களில் கிருத்திகாவினதும், ராஜம் கிருஷ்ணனதும் சில படைப்புக்கள் குறிப்பிடத்தக்கன. கிருத்திகா எழுதிய புதிய கோணங்கி 'ஃப்ருெடின்' தத்துவத்தை விளக்கவே எழுதப்பட்ட நாவலாகும். இதனாலிது யதார்த்தத்தை விட்டு விலகிச் சென்று ஒரு கற்பனை உலகை நிலைக்களனாகக் கொண்டிருக்கின்றது. பாத்திரங்கள் 'ஃப்ருெடின்' கொள்கைக்கு இலக்கணமாகப் படைக்கப் பட்டவர்களாகக் காணப்படுகின்றன. சமுதாயப் பிரச்சனைக்குத் தீர்வு காண ஆசிரியர் "புதிய கோணங்கியில்" தத்துவக் கருத்துக்களை இணைக்க முற்படுகிறார். அதனால் 'புதிய கோணங்கி' நாவல் என்ற இலக்கணத்திலிருந்து விலகிநிற்கிறது.

இன்றையப் பெண் எழுத்தாளர்களுள் குறிப்பிடத் தக்கவராக ராஜம் கிருஷ்ணன் விளங்குகிறார். ஏறக்குறையக் கால் நூற்றாண்டுக் காலமாக நாவல்களை எழுதி வரும் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்களில் தற்போதைய தத்துவக் கருத்துக்களின் இணைப்பினால் மாற்றமேற்பட்டிருப்பதைக் காணலாம். அதற்குதாரணமாக அவர் அண்மையில் எழுதிய 'ரோஜா இதழ்கள்' என்ற நாவலைக் குறிப்பிடலாம். அவர் எழுதிய முன்னைய நாவல்களுக்கும் இந்த நாவலுக்கும் வேறுபாடு காணப்படுகின்றது. இலக்கியம் வாழ்க்கையின் உண்மைகள் என்ற மூலப் பொருள்களினின்றும் வார்க்கப் பெறும் வார்ப்புக்கள் என்ற ரீதியில் அவர் இந்த நாவலைப் பொருள்முதல் வாதக் கருத்துக் கண்ணோட்டத்துடன் படைக்க முற்பட்டிருக்கிறார். 'மைத்ரேயி' என்ற பெண்ணை முக்கிய கதாபாத்திரமாகப் படைத்து அவள் மூலமாகச் சமூகத்திலே பெண்களுக்கும் பொருள்முதல் வாதக் கருத்துக்களுக்கும் இருக்கக் கூடிய இணைப்பினை அவர் எடுத்துக் காட்ட முயன்றிருப்பது சிறந்த முயற்சியாகும்.

இறுதியாக ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிச் சில வார்த்தைகள் குறிப்பிடுவது அவசியமாகும். கருத்துவாத, பொருள்முதல் வாதச் சிந்தனைகள் பற்றிய தெளிவான கருத்துத் தற்போதுதான் உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கிறது. இதனால் தவிர்க்க முடியாதபடி ஈழத்து நாவலாசிரியர்களிடையேயும் தென்னகத்து ஆசிரியர்களிடையேயும் குறைபாடுகள் காணப்படுகின்றன. எனினும் மதிப்பீட்டளவில் ஈழத்து நாவலாசிரியர்களின் இலக்கு பொருள்முதல் வாதக் கருத்துக்களை இணைப்பதாகவே அமைவதைக் காண முடிகின்றது. கே. டானியல், செ. கணேசலிங்கன் ஆகியோரது படைப்புகளில் இப்பண்பினைத் தெளிவாகக் காணமுடியாவிட்டாலும் கருத்துச் சிந்தனை இருப்பதைக் காணமுடிகின்றது. இப்பண்பே ஈழத்து நாவல்களதும் தென்னகத்து நாவல்களதும் வேறுபட்ட பண்பாகவும் கூர்மையடைய ஆரம்பித்துள்ளது.

இதனால் தமிழ் நாவல்களில் தத்துவங்களின் பின்னணியினை இணைக்கும்போது ஒரு ஒழுங்கையும் அமைதியினையும் காணமுடியாவிட்டாலும் அதற்கான ஆரம்ப முயற்சிகளின் அம்சங்களைச் சிற்சில நாவல்களிற் காணமுடிகின்றது. அடுத்த நூற்றாண்டுக் காலப்பகுதியில் இப்பண்பு வளர்ச்சியடையக் கூடுமென்ற நம்பிக்கையுடன் எதிர்கால தமிழ் நாவல்களின் தோற்றத்தினை எதிர்பார்த்திருக்க வேண்டியதும் நவீனகால வாசகர்களுக்குத் தவிர்க்க முடியாததொரு காத்திருப்பாகிவிட்டதெனலாம். ★


மல்லிகை

## புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா [மலர் உட்பட] | 12 — 00 |
| தனிப்பிரதி | — 75 |
| இந்தியா, மலேசியா | 18 — 00 |

(தபாற் செலவு உட்பட)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையில் ஒரு பூனை

மூலம்: ஏனஸ்ற் ஹெமிங்வே
தமிழில்: வ. குகசர்மா

அந்த விடுதியில் இரு அமெரிக்கர் தங்கியிருந்தனர். மாடிப்படி வழியே அவர்கள் இறங்கும்போதும், ஏறும்போதும், அவர்களைச் சந்திப்பவர்கள் அவர்களுக்கு அறிமுகம் இல்லாதவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் தங்கியிருக்கும் அறை மேல்மாடியில் இருந்தது. அது கடலையும் பொதுப் பூங்காவையும், யுத்த நினைவுச் சின்னங்களையும் நோக்கியிருந்தது. காலநிலை சிறப்பாக இருக்கும்போது யாராவது ஒரு ஓவியனைப் படம் வரை கருவிகளுடன் அங்கு காணலாம். ஓவியர்கள், பூஞ்சோலையின் அழகையும், அதனை நோக்கி நிற்கும் விடுதியின் பிரகாசமான தோற்றத்தையும், கடலையும் மிக விரும்பினர்கள். இத்தாலிய மக்கள் அதிக தூரத்திலிருந்து யுத்த ஞாபகச் சின்னங்களைப் பார்க்க வருவார்கள்.

மழை பெய்து கொண்டிருந்தது. வெங்கலத்தினற் செய்யப்பெற்ற யுத்த ஞாபகச் சிலைகள் மழை நீரில் பிரகாசித்தன. மரக்கிளைகளில் நின்றும் நீர் சொட்டின. கடல் அலைகள் வரிசை வரிசையாக எழுந்து கரையில் வந்து மோதி அழிந்தன. வழியில் உள்ள பல பள்ளங்களில் மழை நீர் தேங்கி நின்றது. முற்பக்கத்தில் மோட்டார் வண்டி நிறுத்தும் இடம் வெறுமையாகக் காட்சியளித்தது. அந்த வெறுமையை நோக்கியபடி காவற்காரன் ஒருவன் விடுதி வாசலிலே நின்ருன்.

அந்த அமெரிக்கப் பெண் வெளியே மழை பெய்வதை சாளரம் வழியாக நோக்கினுள். அவள் அந்தச் சாளரம் வழியாக தரையையும் தாவாரத்தையும் பார்க்கிருள். அறையின் நேரே கீழ்த் தரையில் ஒரு பூனை. அது மழையால் நனையும் பச்சை நிற மேசையின் கீழ் ஒதுங்கி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்தது.

'நான் கீழே போய் அந்தப் பூனைக்குட்டியை இங்கே கொண்டுவரப் போகிறேன்' அவள் தன் கணவனிடம் கூறினுள்.

'நான் போய் அதனைக் கொண்டு வருகிறேன்' கட்டிலிற் படுத்தபடியே வாசித்துக்கொண்டிருந்த அவள் கணவன் கூறினுன்,

'வேண்டாம் நானே போகிறேன். பாவம் அந்தப் பூனைக்குட்டி மேசையின் கீழ் ஒதுக்கித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயல்கிறது'

கணவன் இரண்டு தலையணைகளை முட்டுக் கொடுத்துக் கொண்டு மீண்டும் வாசிக்க ஆரம்பித்தான்.

'மழையில் நனைந்து விடாதே'

அவள் கீழ் மாடிக்குச் சென்ருள். விடுதியின் தலைவன் அவளைக் கண்டு எழுந்து நின்று, வணக்கம் செலுத்தினுன். அவன் ஓர் உயர்ந்த வயோதிப மனிதன். அவள் அந்த விடுதியின் தலைவனை மிகவும் விரும்பினுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெளியில் மழை கொட்டுகிறது' விடுதியின் தலைவன் அவளுக்கு கால நிலையை நினைவூட்டினான், அவள் விடுதிக்குத் தலைவனை மனதுள் மெச்சினாள். விடயங்களை அவன் கையாளுந்திறன், அவனது தோற்றம், அவன் தனக்குக் காட்டும் பணிவு இவையாவும் அவனை மெச்சும்படி செய்தன.

இந்த மன நினைப்புடன் விடுதியின் வெளிக்கதவைத் திறந்தாள். மழை கடுமையாகப் பெய்து கொண்டிருந்தது. ஒரு மனிதன் தொப்பியுடன் முற்றத்தைக் கடந்து உள்ளே வந்தான்.

'நான் வலப்பக்கமாகத் தாவாரம் வழியாக நனையாமல் போகலாம்' அவள் நினைத்தாள். அதே சமயம் அவள் பின்னால் ஒரு குடை விரிந்தது. விடுதியின் சிறு பணிவிடைகளைச் செய்யும் பெண்ணே அக்குடைக்குரியவள்.

'தாங்கள் மழையில் நனையக்கூடாது, அவள் அமெரிக்கப் பெண்ணை நோக்கி இத்தாலிய மொழியிற் கூறினாள். விடுதியின் தலைவன் அவளை அனுப்பியிருக்க வேண்டும்.

அந்தப் பெண் குடைபிடிக்க அவளுடன் நடந்து அமெரிக்கப் பெண் அறைச் சாளரத்தின் நேரே கீழ் உள்ள தரைப்பகுதியை அடைந்தாள். அந்தப் பச்சைநிற மேசை அங்கேயிருந்தது. ஆனால். பூனையைக் காணவில்லை. அமெரிக்கப் பெண்ணின் முகம் குழப்பநிலையைக் காட்டியது. அவளது குழப்ப நிலையைக் கண்ட விடுதிப்பெண்,

'அம்மா நீங்கள் ஏதேனும் தவற விட்டு விட்டீர்களா?' என்று கேட்டாள்.

'இங்கே ஒரு பூனை இருந்தது' அமெரிக்கப் பெண் பதில் கூறினாள்.

'ஒரு பூனை?' 'மழையில் ஒரு பூனை' விடுதிப் பெண் சிரித்தாள்.

'ஆம் ஒரு பூனை இந்த மேசையின் கீழ் இருந்தது'

அவள் மேலும் கூறினாள். 'ஓ, நான் அதை விரும்புகின்றேன். எனக்கு ஒரு பூனைக்குட்டி தேவை?' இவ்வாறு அமெரிக்கப் பெண் ஆங்கிலத்தில் கூறவும், விடுதிப் பெண்ணின் முகம் சுருங்கியது.

'அம்மா வாருங்கள் நாம் உள்ளே போவோம் அல்லது நீங்கள் நனைந்து விடுவீர்கள்' விடுதிப் பெண் கூறினாள்.

'நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'

அவர்கள் வந்த வழியே திரும்பிச் சென்றார்கள்.

அமெரிக்கப் பெண் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். விடுதிப்பெண் குடையைச் சுருக்கிக் கொண்டாள். விடுதியின் தலைவன் முன்போல வணங்கினான். இந்த மரியாதை அவளுக்கு ஒருவித மயக்கத்தை உண்டாக்கியது. அதேசமயம் தான் சிறியவள் போலவும் தோன்றியது.

ஒரு கணம் அவள் தன் கௌரவ நிலையைச் சிந்தித்தாள். அவள் மாடிப்படி ஏறித் தன் அறையை அடைந்தாள். அவள் கணவன் வாசிப்பில் ஆழ்ந்திருந்தான்.

'பூனையைக் கொண்டு வந்தாயா?' அவன் புத்தகத்தை மூடிவிட்டு அவளைக் கேட்டான்.

'அது எங்கேயோ போய் விட்டது'

'ஆச்சரியமாக இருக்கிறதே அதற்குள் அது எங்கே போயிருக்கக் கூடும்' அவன் கூறினான்.

அவள் கட்டிலில் இருந்தாள்.

'நான் அதை மிகவும் விரும்புகின்றேன்' அவள் கூறினாள், 'நான் ஏன் அதை அவ்வளவு விரும்புகின்றேன் என்று எனக்கே புரியவில்லை. அந்தப் பூனைக்குட்டி எனக்கு வேணும், பாவம் அந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப் பூனைக்குட்டி மழையில் எங்கு சென்றதோ?'

அவள் கணவன் ஜோர்ச் மீண்டும் வாசிக்கத் தொடங்கினுன்.

அவள் உடுக்கும் மேசைமுன் சென்ருள். முகம் பார்க்கும் கண்ணுடியை எடுத்து தன் முக அழகைப் பார்த்தாள். முதல் பாதி, பிறகு மறுபாதி பின் தலையழகையும், கழுத்தையும் நோக்கினுள். 'எனது மயிரை வளர விடுவது நல்லது என்பது எனது எண்ணம். நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?' அவள் தன் கணவனைக் கேட்டாள்.

ஜோர்ச் திரும்பிப் பார்த்தான். அவள் மயிர் கத்தரிக்கப் பெற்று அவள் கழுத்து ஒரு வாலிபனது கழுத்துப் போல அழகாயிருந்தது.

'இப்படி இருப்பதைத்தான் நான் விரும்புகின்றேன்' அவன் கூறினுன்.

'நான் இதை விரும்பவில்லை' அவள் கூறினுள்.

'நான் ஒரு வாலிபனைப் போலத் தோன்றுவதை விரும்பவில்லை'

ஜோர்ச் படுக்கையில் தன் நிலையை மாற்றிக் கொண்டான். ஆனுல் கண்களை அவளிடமிருந்து எடுக்கவில்லை.

அவள் கண்ணுடியை மேசை மேல் வைத்துவிட்டு ஜன்னல் அருகே சென்று வெளியில் நோக்கினுள். அங்கே இருள் பரவ ஆரம்பித்திருந்தது.

'நான் எனது தலைமயிரை ஒழுங்காகவும், மெதுமையாகவும் வளர்த்து பின்னுல் பெரிய கொண்டையாக முடிய வேண்டும்' அவள் உரத்துக் கூறினுள்.

'ஒரு பூனைக்குட்டி எனது மடியிலிருக்க வேண்டும், நான் எனது கையால் அதன் முதுகைத் தட்டும் தோறும் அது 'குறு குறு' என்று சத்தம் போட வேண்டும்'

'அப்படியா?' ஜோர் படுக்கையில் இருந்தபடியே கேட்டான்.

'நான் மேசையில் வெள்ளிப் பாத்திரத்தில் உணவருந்த வேண்டும். எனக்கு மெழுகுவர்த்திகள் வேண்டும். நான் எனது கூந்தலை நிலைக்கண்ணுடி முன் நின்று வார வேண்டும். எனக்கு ஒரு பூனைக்குட்டி வேண்டும், புது உடுப்புகளும் வேண்டும்' அவள் கூறினுள்.

'போசாமல் எதாவது எடுத்து வாசி'

ஜோர்ச் திரும்பவும் வாசிக்கத் தொடங்கினுன்.

அவன் மனைவி சாளரத்தால் வெளியே நோக்கினுள். மழை என்னும் பெய்துகொண்டிருந்தது.

'எப்படி இருந்தாலும் எனக்கொரு பூனை வேண்டும், எனக்கொரு பூனை கட்டாயம் வேண்டும், எனக்கு இப்பவே ஒரு பூனை வேண்டும்.

'சரி நீள் மயிரோ, வேறு பொழுது போக்கோ இல்லா விட்டாலும் நான் ஒரு பூனையை வைத்திருக்கலாமல்லவா?

ஜோர்ச் இதனைக் கவனிக்கவில்லை. அவன் வாசித்துக் கொண்டிருந்தான். அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு நின்ருள், யாரோ கதவில் தட்டினுர்கள்.

'யாரது?' ஜோர்ச் தலையை மிதத்திப் பார்த்தான்.

கதவின் பக்கத்தே விடுதிப் பெண் நின்ருள். அவள் உடலில் ஆமையைப் போன்ற நிறமுடைய ஒரு பெரிய பூனை அவள் உடலைத் தழுவிக் கொண்டு தொங்கியது.

'மன்னிக்க வேண்டும், தலைவர் இதை அம்மாவிடம் கெடுக்கும்படி கூறினுர்' என அவள் சொன்னுள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரத்தி

அந்தக் கருக்கல்,
தென்னை மரங்களின் அடியில்
அம்மி யரைக்கும் விதமாக
அலை வந்து வீசும்.

அதைப் பார்த்துக்
குந்திக் கிடக்கும் கருங்கற்
பாறை மடியுக்குள் அலைவந்து
சிறுபிள்ளை யாட்டம் கல்வீசும்.

அந்த நகரத்தில்
மங்கல் மாலை; பூனைக் கண்
ஒளிக் கம்பம். பிதுங்கி வழியும்
பாரத்துப் புகை வண்டி;

அங்கே, அலுவலக அறையில்
அரைத்த மாவை அரைக்கும்
கடதாசிப் புளுக்கத்தைச் சுமந்து
வேலைப் பகிர்வின் யந்திரத்தால்
வாழ்க்கை யொடிந்து துண்டுகளாய்த்
துளாய்ச் சிந்திவிட்ட தனிமை.

அடுத்த கடைக்குள், சுடுசாம்பார்த் தோசை
சுவைக்கும் சூட்டுக்குட் புகுந்தலாபம்—
எப்போ வரவேண்டும் முதுமை, இப்போ
இளமைக்குட் புகுந்து கொடி கட்ட,

காலி வீதியிற் கர்ப்பிணியாய்ச்
செல்லும் பஸ்கள், நடு நடுவே
வீசும் புதுக் கார்கள்,
கடை முகப்பு, வாயில், இடைவெளியை
மறைக்கும் பற்கள், புத்தகமாய்த் தூங்கும்.

சபா. ஜெயராசா

---

## தூங்கு மகனே!

சிங்கள மூலம்: மைத்திரி பீனுகொட

ஆராரே..! ஆரிரோ...!
கண்ணிறங்கு என்மகனே!

நவயுகத்தின் சிற்பிகளாம்
பாட்டாளித் தோழரொடு
நாட்டுக்காய் உன்தகப்பன்
உழைப்புச் சக்கரத்தில்
அரைபடச் சென்றுள்ளார்!
அவர்கள் சிந்துகின்ற......
வியர்வைத் துளிகளிலே—
மகனே உன்னெதிர்காலம்
சிவப்பாய் ஜொலிக்குதடா!

மகனே நீ
நித்திரை விழித்தெழும்போது
கீழ்வானில்......
புதுச் சூரியன்
சிரித்தெழுவான்!
வெற்றி நமக்குரித்தாகும்!
அதுவரையில்......
கண் கலங்காது—
தூங்கு மகனே!

தமிழில்: செந்நிரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்களின் பாடல்

IN-89

ஸுலாஃபா அல் - ஹெகாவி

பறிபோயிற்று — எந்தன்
காதல்
'பிஸான்' இன் இமைகளில்
படிந்தது — அதன்
நிழல்
ஹைஃபாவின் — மாதுளம்
கன்னங்களிலே
படர்ந்திட்டன — அதன்
பசிய புல் வெளிகள்
தவழ் கடலலை — அவர்
தலைமயிர் போல
பரப்பிற்று ஆக்ரேயின்
பரிமள சுகந்தம்
ஜீவ அன்பரின் — உதடுகளில்
ஜஃபா
தவழவிட்டது
கின்னமும்,
கீதமும்.

எங்கள் அரிவாள்,
எங்கள் மலர்கள்,
எங்கள் தோட்டத்து
ஸெய்த்தூன் கனிகள்,
ஹக்கூராவின்
எலுமிச்சைகள்,
எங்கள் பட்சி
ஜாலப் பண்ணிசை,

இவைகள் யாவும்
நினைவில் சுமந்து
இழக்கப்பட்டது - எந்தன்
காதல்;

ஜெரூஸலேம்,
அக்வார்,
ரம்லாவின் பெண்களே
புனிதமானது — நம்
பிரதிக்ஞை.
அவரை மீண்டும்
அழைத்துக் கொணர

— வெறித்த பாலையின்
பேரீத்த மரமாய்

உடுக்குலம் நோக்கி
உயர்த்திய ஏணியாய்—

நேரிழையீர் நாம்
கரங்கள் நீட்டுவோம்.
அடரிருள் இரவில்
அவரின் கண்களில்
தேங்கிய இருளைத்
துடைத்து நீக்குவோம்;

திரும்பி அவர் வரும்
திசைவழி தோறும்
தூவி வைப்போம்
செயலின் விதைகள்;

நித்திய மான
அவரின் பாதையில்
நீராய்ப் பாய்ச்சுவோம்—
துரோகிகள் ரத்தம்!

மின்னும் இரவு
நட்சத்திரங்களால்
மனையொன் றமைப்போம்
அவருக்காக.
மாடத்தில் வைத்த
எரி பந்தங் களாய்
மோதிச் சாடுவோம்
எண்ணெய் பீப்பாக்களை!

வர்ஷித்துக் கொட்ட
அவர் பாதங்களில்
வாசமலர்கள் — கூடையில்
நிரப்புவோம்.

— தூய்யதான நம்
ஹிருதயங்கள் தான்
தூவிடச் சேர்க்கும்
அந்த மலர்கள்!

தமிழில்:

பண்ணாமத்துக் கவிராயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கு

டாக்டர்

## க. இந்திரகுமாரின்

## 'புதுயுகம் கண்டேன்'

**உமாசங்கர்**

'சோவியத் யூனியனில் 'அரசாங்க மொழி' எதுவும் கிடையாது. அத்தகைய ஒரு மொழியைப் புகுத்துவதும் சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், யதார்த்தமான சமூக — பொருளாதாரக் காரணங்களுக்காக தேசிய இனங்களுக்கிடையே ஒரு கருத்துப் பரிவர்த்தனைச் சாதனமாக சோவியத் நாட்டு மக்களே ரஷ்ய மொழியைச் சுயவிருப்புடன் தேர்ந்தெடுத்துள்ளனர்' (புதுயுகம் கண்டேன் பக். 171) டாக்டர் இந்திரகுமார் நேரில் கண்டு எழுதிய இந்த வாசகங்களைப் படித்தபோது எனக்கு எங்களுடைய நாட்டு அரசியல் தான் ஞாபகத்திற்கு வந்தது.

மக்கள் எழுத்தாளர் முன்னணி வெளியீடான இவரது பிரயாணக் கட்டுரை நூல் மிகவும் அழகாகவும் கையடக்கமாகவும் உள்ளது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் முன்னுரை வழங்கியுள்ளார். இவர் தமது உரையில் 'மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் பின்னர் பிறந்த ஒரு புதிய துறைதான் சோவியத் இயல். இத்துறைக்கு நண்பர்களும் பகைவர்களும் தமது பங்களிப்பை ஆற்றியுள்ளனர்' என்று பெருமைப் படுகின்றார். இப் பயணக் கட்டுரையைத் தொடராகத் தினகரனில் வெளியிட்ட தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் தமது அணிந்துரையில், 'பிரயாணக் கட்டுரை— டாக்டர் இந்திரகுமார் கால் எடுத்து வைத்த புதிய துறை- விண்வெளி ஆராய்ச்சியில் இவர் இறங்கி ஓர் அரிய நூலைத் தந்தபோது. அரசாங்கம் சாஹித்திய மண்டலப் பரிசளித்துக் கௌரவித்தது. பிரயாணக் கட்டுரைகள் பற்றி நாம் அதிகம் குறிப்பிடத் தேவையில்லை. இக் கட்டுரைகளைப் படிக்கும்போது வியாபித்தெழுகின்ற உணர்வே அவர் எழுத்தின் வெற்றி. இவற்றைப் படிக்கும் தோறும் சோவியத் யூனியனுக்குச் சென்று அந்நாட்டைப் பார்க்க வேண்டும், அம்மக்களோடு பழகவேண்டும் என்ற ஆவல் எம்மை அறியாமலேயே எழுகின்றது. ஏகாதிபத்தியச் சதிப் பிரசாரம் முறியடிக்கப் பட்டு நிதர்சனமான யதார்த்த நிலை தோன்றுவதால் சோவியத் மக்களுக்கு எம்மை அறியாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே எமது அன்புக்கரத்தை நாம் நீட்டுகிறோம்' என்று மிகவும் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

மிகவும் தர்க்க ரீதியாகவும் புள்ளி விபரங்களுடனும் ஒப்பிட்டு அணுகு முறையிலும் எதுவித மயக்கமும் தராத அழகான இனிய தமிழ் நடையிலும் டாக்டர் இந்திரகுமார் இந்நூலை எழுதியுள்ளார். தமது கருத்துக் களையும் பயண அனுபவங்களையும் மொத்தம் 20 அத்தியாயங்களாகப் பிரித்து 173 பக்கங்களில் எழுதி முடித்துள்ளார். பொருத்தமான தலைப்புகளுடன் ஒவ்வொரு அத்தியாயமும் ஆரம்பமாகியுள்ளன. துருக்மேனியாவின் எதிர்காலம் பற்றி அங்கு பிரபலம் மிக்க கவிஞர் மக்தும்குலியின் கவிதைகளைக் கூடத் தமது கட்டுரைத் தொடரில் தரும் அளவிற்குக் கவிதை இலக்கிய ஆர்வம் மிக்கவராகவும் துருக்மேனிய மக்களின் விழிப்புணர்வை எமது மக்களுக்கும் ஊட்டும் பேரார்வம் கொண்டவராகவும் டாக்டர் எமக்குத் தோற்றமளிக்கின்றார்.

'துருக்மேனிய மண்ணை
மகத்தான எதிர் காலம்
அண்மிக்கிறது!
துருக்மேனிய வீரன்
தருக்கு கண்டு
கடும் பாறையும்
அஞ்சி
உருகிவிடும்'

என்று இக்கவிதையைத் தமிழில் திரு. பெரி. சண்முகநாதன் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார்.

முக்கியமான இடங்களையும் கட்டிடங்களையும் பொருத்தமான பகுதிகளில் புகைப்படம் மூலம் விளக்கியுள்ளார். லெனின் சமாதி, காரகும் கால்வாய், உலகின் உயர்ந்த கட்டிடமான மாஸ்கோ ஒஸ்டன்கினோ தொலைக்காட்சிக் கோபுரம், உலகப் புகழ் பெற்ற பொல்ஷோய் நடன அரங்கு, புத்தக விரிப்பைப் போன்ற சீ. எம். ஈ. ஏ. அலுவலகக் கட்டிடம் என்பன போன்ற முக்கியமான பகுதிகள் மிகவும் அழகான புகைப்படங்களால் விளக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அத்தியாயமும் ரஷ்ய மக்கள் இப்படிப்பட்டவர்களா? ரஷ்யா இவ்வளவு தூரம் முன்னேறியுள்ளதா? என்று வியக்கும் அளவிற்கு எம்மைக் கவர்கின்றன. டாக்டர் அடிக்கடி ஏகாதிபத்திய நாடுகளையும் ரஷ்யாவையும் ஒப்பிட்டுப் பல விஷயங்களை ஆராய்ந்துள்ளார். 'சோவியத் நாட்டில் ஆணுக்கொரு சம்பளம், பெண்ணுக்கொரு சம்பளம் என்ற நிலை இல்லை. ஆணோ பெண்ணோ அவர்களது தகமைகள், திறமைகள், வேலையின் தன்மை என்பனதான் சம்பளம் வழங்கும்போது கணக்கொடுக்கப் படுகின்றனவே தவிர ஆணு பெண்ணு என்பதல்ல என்று இவர் அங்குள்ள சம்பளத் திட்டம்பற்றி விளக்குகின்றார். இவரது கட்டுரை நூலைப் படித்ததும் மிகவும் விரைவாக எமது நாடும் சோவியத் யூனியன் போல முன்னேறவேண்டும் என்ற எண்ணம் குறுகுறுக்கிறது. அரசியல்வாதிகளும் நல்ல அரசை அமைக்கவல்ல இளைஞர்களும் யுவதிகளும் கட்டாயமாக இந்த நூலைப் படிக்க வேண்டும். இது வெறும் பிரயாணக் கட்டுரை அல்ல. எமது சமுதாயத்தையே மாற்றி அமைக்க வல்ல உந்து சக்தி, நல்லவற்றைச் செய்யும் பணியில் தமது பங்களிப்பைச் செலுத்தியுள்ள டாக்டருக்கு எனது உளம் நிறைந்த பாராட்டுதல்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞன் இயற்றும் விம்பம்

மைக்கேல் ஒவ்சியன்னிக்கோவ்

தமிழில்
முருகையன்

கலை என்றால் என்ன? அது வாழ்க்கையின் பிரதிபலிப்பு; உலகின் நிழல்; உண்மையின் விம்பம்.

கலைஞன் ஆக்கும் விம்பம் எப்படிப்பட்டது, அதன் தன்மைகள் யாவை? அழகியற் கொள்கையின் அச்சாணி போன்றது இக்கேள்வி.

ஆயினும் பூஷுவா விமரிசகர்கள் இக்கேள்வியை — கலையியல் விம்பம் பற்றிய ஆராய்ச்சியை — முக்கியமானது எனக் கருதுவதில்லை. கலை என்பது பருமையாக, உருவப் பண்பு உடையதாக இருக்கவேண்டியதில்லை; அது நுண்ணியதாக, அருவமாக, சூக்குமமாக இருக்கலாம்; ஆகையால், கலைஞன் இயற்றும் விம்பம்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை என்று அவர்கள் கூறுவார்கள்.

எனினும் யதார்த்தவாதக் கலை நோக்கின்படி பார்க்கும் போது கலைஞன் படைத்தளிக்கும் விம்பத்தின் தன்மையையிட்டுத் தெளிவு பெறுதல் முக்கியம்.

## 2

கலையியல் விம்பம் பற்றிய மார்க்சியத் தீர்வு பிரதிபலிப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. பிரதிபலிப்புக் கொள்கை கூறுவது என்ன?

பொருள்களெல்லாம் உண்மையானவை; எமது அறிவுக்குப் புறம்பாக, அதனைச் சாராமல் உள்ளவை; மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களின் வாயிலாகவும் நாம் சில உணர்வுகளை அல்லது பதிவுகளைப் பெற்றுக் கொள்கிறோம். இவற்றைப் புலப்பாடுகள் என்று கூறலாம். எங்கள் புலப்பாடுகளும் அறிவுணர்வும் புறவுலகின் விம்பமே ஆகும். பொருள் இல்லாமல் விம்பம் உண்டாகாது என்பது வெளிப்படை. விம்பத்தை ஆக்கும் சாதனம் நமது அறிவுணர்வு; அந்தச் சாதனத்துக்குப் புறம்பாக, விம்பத்துக்கு மூல முதலான பொருள் இருக்கிறது. 'அறிவுணர்வு பிரதிபலிக்கிறது— சகல உலகாயத தத்துவத்துக்கும் அடிப்படையானது இக் கருத்தே' என்றார் லெனின். இதே கருத்துத்தான் பிரதிபலிப்புக் கொள்கைக்கும் ஆதாரமாக உள்ளது.

ஆனால் இந்தப் பிரதிபலிப்பு வெறும் கண்ணாடியில் நிகழும் உயிர்ப்பில்லாத பிரதிபலிப்புப் போன்றதன்று. மனித சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையைப் பிரதிபலிக்கும் போது. அது உயிரற்ற, சடத்துவமான, அருவமான, முரண்களற்ற ஒரு செயலாக அமைவதில்லை. இடையறாத இயக்கம் அங்கு நிகழ்கிறது; முரண்பாடுகள் தோன்றுகின்றன; அவை தீர்க்கவும் படுகின்றன.

மனிதன் தான் பெறும் பொறியுணர்வுகளையும் புலப்பாடுகளையும் பதப்படுத்துகிறான். அதன் மூலம் உண்மையைத் தன்வசமாக்குகிறான். உண்மையை வசப்படுத்தும் போது, ஒரு சமுதாயப் பிறவியாக நின்றே அதைச் செய்கிறான். உலகை அறிவது மாத்திரமன்றி அதை மாற்றவும் அவன் முயல்கிறான். அப்போது ஒரு குறிப்பிட்ட வர்க்கம் அல்லது சமுதாய சக்தியின் தரப்பில் நின்றே அவன் செயலாற்றுகிறான்.

உண்மையை வசப்படுத்தும் முயற்சி பல படிநிலைகளில் நிகழ்கிறது. ஒவ்வொரு நிலையிலும் அறியப்படும் உண்மைகள் அந்தந்த நிலைகளின் எல்லைக்கு உட்பட்டவை; அவை தொடர்பியல் உண்மைகளின் கூட்டுவிளைவே பரிபூரண உண்மை ஆகும். எமது சிந்தனை பரிபூரண உண்மைக்கு எம்மை இட்டுச் செல்கிறது. எமது அறிவானது புறவயமான பரிபூரண உண்மையை எந்த அளவுக்கு அணுகிச் செல்ல முடியும் என்பது வரலாற்று ரீதியிலே சில எல்லைகளுக்கு உட்பட்டது. ஆனால் அந்த உண்மை உண்டு என்பதற்கும் அதனை நாம் அணுகிச் செல்கிறோம் என்பதற்கும் தடை இல்லை.

இவையே பிரதிபலிப்புக் கொள்கையின் பிரதான கருத்துக்கள்.

## 3

மேலே கூறிய கருத்துக்களின் துணை கொண்டு, கலைஞன் இயற்றும் விம்பம் எப்படிப்பட்டது என்று பார்ப்போம்.

மனிதனின் அறிவுணர்வு இயற்கையை அல்லது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும்போது அது இருவேறு விதங்களில் நிகழலாம். ஒன்று விஞ்ஞான முறை; மற்றது கலை முறை.

விஞ்ஞானத்தில் வரும் விதிகளும் கொள்கைகளும் கோட்பாடுகளும் உண்மையின் விம்பங்களே; அவை கருத்துவடிவில் உள்ளவை.

ஓவியம், சிற்பம், இலக்கியம் இசை முதலானவற்றில் இடம் பெறுவன கலையியல் விம்பங்கள்.

விஞ்ஞான விம்பங்களைக் 'கருத்துகள்' என்றும், கலையியல் விம்பங்களை மாத்திரமே அடைமொழி எதுவும் இன்றி, 'விம்பங்கள்' எனவும் இனி இக்கட்டுரையிற் குறிப்பிடுவோம்.

கருத்துகளும், விம்பங்களும் உண்மையின் பிரதிபலிப்புகளே. அவ்வாறாயின் இவற்றிடையே உள்ள வித்தியாசம் யாது?

விம்பம் உருவப் பண்பு வாய்ந்தது என்றும், கருத்து அருவமானது என்றும் சிலர் கூறுவர். இப்பாகுபாடு பொருந்தாது. உண்மையின் சில அம்சங்களைப் பிரித்தெடுத்தே விஞ்ஞானி வழங்கும் கருத்துகள் பெறப்படுகின்றன. ஆனால் கலைஞனும் உண்மையின் சில அம்சங்களைப் பிரித்தெடுத்தே தன் விம்பத்தை ஆக்குகிறான். உண்மையை அப்படியே பெயர்த்து எடுத்து வழங்குவது இயலாத காரியம். (நெச்சுறலிசம் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் இயல்புரவிற்சிப் பாணி எவ்வளவு வீணானது என்பது இதிலிருந்து விளங்கும்.)

எனவே விம்பமும் கருத்தும் முற்றிலும் வேறுபட்ட தன்மை உடையன அல்ல. ஒப்பீட்டளவில் விம்பம் உருவத்தன்மை கூடியது; கருத்து அருவத் தன்மை கூடியது. கலைஞனது நோக்கத்தின் அடியாகவும் அவன் கையாளும் தெரிவுமுறைகளின் அடியாகவும் எழுவது இவ்வித்தியாசம்.

கலைஞனது தெரிவுமுறை எப்படிப்பட்டது? அவன் தெரிவு செய்யும் அம்சங்களில், காட்சிப் பண்பும் ஓசைப்பண்பும் அதிகமாக இருக்கும்; அவ்வம்சங்கள் ஐம்புலன்களுடன் நெருங்கிய சம்பந்தம் உள்ளவை. ஆதலால் வெறும் கருத்துக்களைவிட, கலைஞன் இயற்றும் விம்பங்கள் முழுமையான வாழ்க்கை பற்றி, உறைப்பான, வலிமை மிக்க மனப்பதிவுகளை நமக்கு வழங்குகின்றன.

ஆனால், சில வேளைகளில் விஞ்ஞானக் கருத்துகளுக்கும் அத்தகைய 'புலன்பாட்டு மணம்' இருப்பதுண்டு.

அவ்வாறாயின் பிரதான வித்தியாசம் எது?

கொள்கை வழிப்பட்ட, தருக்க ரீதியான, புள்ளி விபரப் பாங்கான, பரிசோதனை முறையான விஞ்ஞானச் சிந்தனை முறைகள் கலையியல் விம்பவாக்கத்தில் இடம் பெறுவதில்லை: விஞ்ஞானக் கருத்தாக்கத்தில் இடம் பெறும். இதுவே பிரதான வேறுபாடு.

புலன் வழிப்பட்ட பிரதான பொதுப் பண்புகளையே கலை கையாள்கிறது. இதுவே கலையின் தனித்தன்மை.

கலையில், பொதுவான அம்சங்கள் தனிப்பட்ட ஒன்றன் மூலம் உணர்த்தப்படும். பொதுப்பட்ட மெய்மைக்கும் தனிப்பட்ட மெய்மைக்குமுள்ள ஒருமைப்பாட்டை, குறிப்பிட்டதொரு பொருளின் வாயிலாகவே கலைஞன் உணர்த்துகின்றான்; கலைஞனின் கருவியாகப் பயன்படும் அப் பொருட்பிழம்பே விம்பமாகும்.

ஆனால் விஞ்ஞானமோ, மேற்படி ஒருமைப்பாட்டினைப் பொதுமைப்பாடுகளின் வாயிலாக உணர்த்தும். அந்தப் பொதுமைப் பாடுகளே 'கருத்துகள்'

இங்கு நாம் விளக்கிய பாகுபாட்டின் வழி, விம்பத்துக்கும் கருத்துக்குமிடையேயுள்ள வேறுமிரு வேறுபாடுகள் மனங்கொள்ளத் தக்கன. (1) விஞ்ஞானக் கொள்கையைப் பல்வேறு வடிவங்களில் எடுத்துரைக்கலாம்; ஆனால் கலைஞன் இயற்றும் விம்பத்துக்கு ஒரே ஒரு வடிவமே உண்டு; அது அவ்விம்பத்தை இயற்றிய கலைஞன் வழங்கிய வடிவமாகும். (2) கலையுலகில் நிலையூன்றியதொரு விம்பம் ஒரு போதும் காலவதி ஆகிவிடுவதில்லை. அதனைப் பெயர்த்து விலக்கிவிடல் முடியாது: புதிய விம்பங்களுக்கு நடுவே பழைய விம்பத்துக்கும் ஓர் இடம் உண்டு.

## 4

கலைஞன் இயற்றும் விம்பத்தின் மற்றுமோர் இயல்பு கவனிக்கத்தக்கது. அந்த விம்பம் பல்வேறு விளக்கங்களுக்கும் இடமளிப்பதாக உள்ளது. உண்மைக் கலையானது முழுவுலகின் ஒரு சிறு மாதிரியுரு எனலாம்: அதிலிருந்து பல்வேறு விளக்கங்களும் பாய்ந்து வருகின்றன. ஏனெனில், புறவய உண்மையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்கள் பலவற்றைப் பிரித்தெடுப்பதுடன், வேறு சில அம்சங்களைச் சேர்த்துக்கொள்ளும் வல்லமையும் கலைக்கு உண்டு. ஆனால், இச்சேர்ப்பு உலகத்தைத் திருத்தமாகவும் ஆழமாகவும் பிரதிபலிப்பதற்கு உதவி செய்தல் வேண்டும்.

இத்தொடர்பில், உயர்வு நவிற்சிபற்றியும் உருவகம் பற்றியும் வகையாக்கம் பற்றியும் சில கருத்துகள் கவனிக்கத்தக்கன.

(அ) உயர்வு நவிற்சி: ஒன்றைப் பத்தாகக் கூறுவது உயர்வு நவிற்சி; சிறிதைப் பெரிதுபடுத்துவதே அது; உயர்வு நவிற்சி கலைகளில் மட்டும் இடம் பெறும்: விஞ்ஞானத்தில் இடம் பெறுது. விம்பத்தின் உணர்ச்சியாற்றலை மிகுதியாக்கும் வகையில் மட்டுமே இந்த உத்தியைப் பயன்படுத்துதல் நியாயமானது. அது கட்டுமீறி நோக்கமில்லாது கையாளப்பட்டால், விபரீதமான திரிபுகளும் பிறழ்ச்சிகளுமே விளையும்.

(ஆ) உருவகம்: உருவகம் என்பது ஆழப்புதைந்த உவமையே ஆகும். 'A போன்றது B' என்று கூறுவதற்குப் பதிலாக, 'A யே B' என்று கூறுவது அது. இங்கு A, B என்பவற்றின் பொதுப்பண்பு மட்டுமன்றி அவற்றுள் ஏனைய பண்புகளும் பேணப்படுகின்றன. உருவகம் கலைகளின் உயிர் போன்றது. அது நமது உணர்ச்சி நோக்கின் திசையைப் பாதிக்க வல்லது. விருப்பு வெறுப்புகளை நெறிப்படுத்தும் ஆற்றல் உள்ளது.

(இ) வகையாக்கம்: வகையாக்கம் என்பது ஒரு பொருளைக் கொண்டு அதே வகையான பொருள்கள் எல்லாவற்றையும் குறிப்பதாகும். விம்ப வர்க்கத்தில் முக்கியமாகப் பங்கெடுப்பது வகையாக்கமே. விம்பத்தில் வரும் தனிக்கூறொன்று புறவய மெய்மையில் வரும் அதே வகைப்பட்ட பல கூறுகளைக் குறித்து நிற்கிறது; எடுத்துக்காட்டுகிறது. இக்கருத்தை மறுப்பார் யாரும் இல்லை. ஆதலால், இதுபற்றி விரிவாக ஆராயவில்லை. ★

---

## ஓர் ஏழைக் கிராமம்

சூடும், குளிருமான வெப்பக்காற்று!
சுவரோடு ஆழ்ந்த காதல் கொண்டுள்ள
சிலந்திக் கூடுகள் குடில்களிலிருந்து,
தப்பித்தால் போதுமென்றோடும் புகை மண்டலம்!
அழுக்கேறிய உடல்களின் கையில்
சுவையில்லா பாலும், தண்ணீரும்!
மற்றொரு புறம்—
பதறி யழும் குழந்தைகளின்
ஒலத்தோடு ஒன்றிணைந்து ஒலிக்கும்
கைத்தொழில் யந்திரங்களின் பெருஞ்சத்தம்!
அன்றாட உழைப்பை நம்பியிருப்பவனுக்கு
ஒரு பரம ஏழையின் சவக்குழி ஆறுதல் கூறியது;
'என்னை நம்பு! தைரியமாய் இரு!'

தில்லையடிச் செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்து மண்ணின்**
**முதல் தமிழ் நாவல்**

## சி. வை. சின்னப்பபிள்ளையின்
## 'வீரசிங்கன் கதை'

**நாகராஜ ஐயர் சுப்பிரமணியம்**

தமிழ் நாவலிலக்கியம் தனது நூருவது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் இன்றையகாலப்பகுதியில், தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் மலேசியா முதலிய ஏனைய தமிழ் கூறும் நல்லுலகிலும், அவ்விலக்கிய வடிவம் பல படிநிலைகளைக் கடந்து அடைந்துள்ள பன்முகப்பட்ட வளர்ச்சி பற்றி ஆராய்வதற்கு வாய்ப்பானதொரு சூழ்நிலை உருவாகி வருகின்றது. ஈழத்தைப் பொறுத்தவரை இத்துறையிற் பயன்தரத்தக்க முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் நாவலின் பொதுவான வளர்ச்சிப் போக்கினை இனங்கண்டு திறனாய்வு செய்வதுடன், சிறப்பாக ஈழத்து மண்ணில் அவ்விலக்கிய வடிவம் வேரூன்றி வளர்ந்து வரும் வரலாற்றை அமைத்தற்குத் துணை புரியும் வகையிலான ஆய்வு முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இத்தகைய ஆய்வு முயற்சிகளின் பெறுபேருக எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் ஈழத்துத் தமிழ் நாவலிற்கான முதல் முயற்சிகள் 19 ஆம் நூற்ருண்டின் இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டன என அறிகிருேம். 1856-ஆம் ஆண்டில் வெளிவந்த 'காவலப்பன் கதை', 1886 ஆம் ஆண்டில் வெளிவந்த 'அசன்பேயுடைய கதை', 1895 ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற 'ஊசோன் பாலந்தை கதை', 1895-ல் வெளிவந்த 'மோகனங்கி' ஆகியன இவ்வகை ஆரம்ப முயற்சிகளாகக் கொள்ளப்படுகின்றன.

இவற்றுள் 'காவலப்பன் கதை' மூர் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய 'பார்லே த போட்டர்' என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் என்பதைத் தவிர அதை ஒரு நாவலிலக்கிய முயற்சி எனக் கொள்ளலாமா? என்ற வினுவுக்கு விடைதரக் கூடிய வேறு தகவல்கள் கிடைக்கவில்லை. 'அசன் பேயுடைய கதை' "இலங்கை சுப்பிறிம் கோட்டுப் பிறக்றரும் முஸ்லிம் நேசன் பத்திரிகைப் பத்திராதிபரும் ஆகிய சித்திலெவ்வை மரைக்கார்' என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூலைப் பற்றிய தகவல்களை ஆராய்ந்து வெளிக் கொணர்ந்த எஸ். எம். கமாலுத்தீன் அவர்கள் இதுவே ஈழத்து முதல் நாவல் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். இந் நூலின் புதிய பதிப்பொன்று அண்மையில் வெளியீடப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. 'மிஸர் தேசத்து அரசகுமார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞன அஸன்பே என்னும் சிறுவனின் சரிதை' என அறியப்படும் இந் நூலின் நாவலிலக்கியத் தரம் ஆய்வுக்குரியது. 'சித்திலெவ்வையின் நூலைப் படிக்குமொருவர் இதற்கு 'அஸன் பேயின் திகைப்பூட்டும் நூதனசாகசங்கள்' என்று பெயரிட்டிருக்கலாமென்று எண்ணக் கூடியதாயுள்ளது. கதையின் கருவும் போக்கும் அவ்விதம் எண்ணத்தக்கதாகவே அமைந்துள்ளன' என்று திறனாய்வாளர் கலாநிதி கைலாசபதி கருதுகிறார்.

'ஓர்ஸொன் அண்ட் வலன்டைன்' என்ற போர்த்துக்கீச நாவலொன்றின் தழுவல் என சில்லையூர் செல்வராசனால் தகவல் தரப்பட்ட 'ஊசோன் பாலந்தை கதை' எஸ். இன்னாசித்தம்பி என்பவரால் எழுதப்பட்டு எஸ். தம்பிமுத்துப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது. இந் நாவல்பற்றி சில்லையூர் செல்வராசன் தமது ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி என்ற நூலில் தந்துள்ள குறிப்பைத்தவிர வேறு தகவல்களில்லை.

ஈழத்தவரான தி. த. சரவணமுத்துப்பிள்ளை தமிழ்நாட்டின் தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி நாயக்க மன்னர்களது வரலாற்றுக் காலப்பகுதியை வைத்துப் புனைந்ததும் தமிழின் முதலாவது வரலாற்று நாவல் என்ற சிறப்புக்குரியதுமான 'மோகனாங்கி' தமிழ் நாட்டில் வெளியிடப் பெற்றது. ஆசிரியர் ஈழத்தவர் என்பதைத்தவிர வேறுவகையில் ஈழத்துடன் தொடர்பில்லாத இந்நாவலை ஈழத்துத் தமிழ் நாவல் என வரையறை செய்ய முடியாதென்பர் சோ. சிவபாதசுந்தரம்.

எனவே 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஈழத்துத் தமிழ் நாவல் தோற்றம் பெறுகின்றது என்று பொதுவாகக் கருதப்பட்டாலும் ஈழத்து மண்ணின் மக்களது வாழ்க்கையை நிலைக்களனாகக் கொண்ட படைப்புக்களாக அக்காலத்தனவையும் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எழுதியவர்கள் ஈழத்தவர்கள் என்ற பொது அடிப்படையிலும் ஒன்றைத் தவிர ஏனையவை ஈழத்திலேயே வெளியிடப்பட்டன என்ற வகையிலுமே ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் முதன் முயற்சிகள் என்று இவை கொள்ளப்படுகின்றன. ஆகவே ஈழத்து மண்ணின் மக்களின் வாழ்க்கையை நிலைக்களனாக் கொண்டு நாவல் எழுதும் மரபு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்தே தோற்றம் பெறக் காண்கிறோம். 1914-ம் ஆண்டு வெளிவந்த 'நொருங்குண்ட இருதயம்' என்ற நாவலே இக்காலப்பகுதிக்குரிய முதலாவது நாவல் என்ற பெருமைக்குரியதாகவிருந்தது. மங்களநாயகம் தம்பையா என்ற பெண்மணி எழுதிய இந்நாவல் யாழ்ப்பாணக் கிராமியச் சூழ்நிலையில், நடப்பியல்புக்கு பொருந்தியவையான பிரச்சினைகளையும் சம்பவங்களையுங் கொண்டு மாந்தரது இயல்பான உணர்ச்சி வெளிப்பாடுகளைச் சித்திரிப்பதாகவும் ஈழத்தில் அக்காலப்பகுதியில் நிலவிய கிறிஸ்துவ சமய பிரசார சூழ்நிலையைப் புலப்படுத்துவதாகவும் அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால நாவலாசிரியர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவரான சி. வை. சின்னப்பபிள்ளையின் 'வீரசிங்கன்' கதை என்ற நாவலின் பிரதியொன்று அண்மையில் பார்வைக்குக் கிடைத்ததன்பின் 'நெறுங்குண்ட இருதயம்' நாவலின் முதன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்குரிய தோன்றுகின்றது. வீரசிங்கன் கதைப் பிரதியைத் தமது அரிய தேட்டத்திலிருந்து தந்துதவிய எழுத்தாள நண்பர் தேவன் அந்நாவல் 1905-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது என்ற தகவலைத் தமது நினைவாதார மூலம் தந்தார். வெளியீட்டு விபரம் — வெளியீட்டாண்டு என்பவற்றை அறியத் தரும் முகப்புப் பகுதி பிரதியில் சிதைந்துவிட்டன. 391 பக்கங்களையும் ஆங்கில முன்னுரையையும் கொண்ட இந்நாவலில் 5-ம் 6-ம் பக்கங்களும் சிதைந்துவிட்டன; 339 - 40-ம் பக்கத்தாள் அரைவாசி கிழிந்துவிட்டது. வெளியீட்டாண்டு விபரப் பகுதி சிதைந்தால் இந்நாவலின் வெளியீட்டாண்டை நிறுவுவதற்குத் துணையாக வேறு ஆதாரங்களையும் நாம் நாடவேண்டி இருந்தது. ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி என்ற நூலில் சில்லையூர் செல்வராசனும் இந்நாவல்பற்றிக் குறிப்பிடுகையில் 1905 -ம் ஆண்டாக இருக்கலாம் என ஊகம் தெரிவித்திருந்தார், அண்மையில் 'இந்து சாதனம்' பத்திரிகை இதழ்களை ஆராய்ந்து கொண்டிருந்தபோது 1905 - 05 - 10 ம் திகதி இதழில் வீரசிங்கன் கதையின் விளம்பரம் காணப்பட்டது. எனவே இந் நாவல் 1905-ல் வெளிவந்துவிட்டது என்பது தெளிவாகிறது.

வீரசிங்கன் கதையே சி. வை. சின்னப்பபிள்ளையின் நாவலிலக்கிய முதல் முயற்சி என்பது அந் நாவலின் ஆங்கில முன்னுரை மூலம் தெரியவருகின்றது. இவரது மற்றைய நாவல்களான உதிரவாசம் விஜயசீலம் ஆகியவை முறையே 1915, 1916 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன.

எனவே இருபதாம் நூற்றாண்டிற்குரியதாக எமக்குக் கிடைக்கும் முதல் நாவல் என்ற வகையிலும், ஈழத்தின் பின்னணியில் எழுதப்பட்ட முதல் நாவல் என்ற வகையிலும் வீரசிங்கன் கதை சிறப்புப் பெறுகின்றது. இவ்வகையில் சி. வை. சின்னப்பபிள்ளை ஈழத்துப் பின்னணியில் எழுதப்பட்ட முதல் நாவலின் ஆசிரியர் என்ற பெருமைக்குரியவராகிறார். பதிப்புப் பேராசிரியர் சி. வை. தாமோதரம்பிள்ளையின் இளைய சகோதரரான இவர் தமையனாரைப் போலத் தமிழ் நாட்டிலே உயர் பதவிகள் வகித்து இளைப்பாறிய பின் ஈழத்துக்கு மீண்டு கல்வி விருத்திக்கான பணிகள் புரிந்தவர் என அறியப்படுகின்றார். 'தனலக்குமி தாலாட்டு' என்ற செய்யுள் நூலையும் இவர் பாடியுள்ளதாக அறிகிறோம். வீரசிங்கன் கதைக்கு இவர் எழுதியுள்ள ஆங்கில முன் வுரை இவர் நாவலிலக்கியத் துறையிலீடுபட்டதற்கான நோக்கினையும் சூழ்நிலையையும் நன்கு புலப்படுத்துகின்றது.

ஈழத்துத் தமிழ்ப் புனைகதை வரலாற்றில் இந்த முன்னுரைக்கும் சிறப்பானதொரு இடமுண்டு. ஈழத்தில் எழும் இலக்கிய முயற்சிகள் ஈழத்து மண்ணின் மக்களின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு அமைய வேண்டுமென்ற தேசிய உணர்ச்சிக் குரல் 'ஈழகேசரி'க் காலகட்டத்தை அடுத்து அண்மைக் காலம்வரை வலுவாக ஒலித்து வந்துள்ளது, இக்குரலை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒலித்த தமிழ்ப் புனைகதை முதல்வர் சி. வை. சின்னப்பபிள்ளை என்று கொள்வதற்கு இம் முன்னுரை ஆதாரமாகின்றது. தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் அங்கு தமிழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த ஆரம்பகால நாவல்களை இவர் பயின்றிருக்கிறார் என்றும் அவற்றிலே சிறப்பாக பி. ஆர். ராஜமையரின் 'கமலாம்பாள் சரித்திரம்' அ. மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' முதலிய பிராமண சமூகத்தைச் சித்திரிக்கும் நாவல்கள் இவரது கவனத்தைக் கவர்ந்திருக்கும் எனக் கொள்ள இம் முன்னுரை வகை செய்கின்றது. அக்காலத் தமிழ் நாவல்கள் இந்திய மக்களது வாழ்க்கையை, சிறப்பாகப் பிராமணரது வாழ்க்கையைச் சித்திரித்துள்ளமைபோல ஈழத்தின் சாதாரண கிராம மக்களது வாழ்க்கையையும் பழக்க வழக்கங்களையும் எடுத்து இந்திய மக்களுக்கு விளக்கிக் காட்ட விரும்பியுள்ளார் என்பது முன்னுரையில் தெளிவாகப் புலப்படுகின்றது. அத்துடன் ஆரம்பகாலத் தமிழ் நாவலாசிரியர் பலருக்கும் இருந்த 'நல்லொழுக்க போதனை' நோக்கும் இவருக்கு இருந்தது. இந்த நோக்கங்களுடன் நாவலில கிய முதல் முயற்சியிலீடுபட்ட இவர் தனது அக்கதை ஒரு இளைஞனது உண்மையான வீர சாகசங்களைக் கூறுவதென்றும், அதிற் காதற் சுவை புதுவகையிற் புனைந்து கூறப்பட்டுள்ளதென்றும், புகழ் பெற்ற தமிழ் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்து இடையிடையே கலந்து அமைக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார். வீரசிங்கன் கதையின் நாவலிலக்கியத்தை மதிப்பிடுவதற்கு இக்கருத்துக்கள் துணை புரிகின்றன.

## 2

வீரசிங்கன் என்னும் வாலிப வீரனின் வீரசாகசங்களைப் புனைந்துரைப்பதாக அமைந்த இக்கதை நல்லொழுக்க போதனையைப் பொருளாகக் கொண்டது. நற்பண்புகள் பலவும் பொருந்திய கதாநாயகன் மல்லாகத்திலிருக்கும் தன் சகோதரரை விட்டுப் பிரிந்து யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பிரதேசங்களைக் கால்நடையாகக் கடந்து அனுராதபுரத்தை அடைகிறான், இந்த நீண்ட நடைப் பயணத்தில் அவன் எருமை, யானை, என்பனவற்றையும் கூட்டாக எதிர்க்கும் பகைவர் பலரையும் வென்று வாகைசூடுகிறான். அனுராதபுரத்தில் மெனிக் பண்டா என்ற வீரனுடன் மோதி வெற்றி பெற்று அவனை நட்பாக்கிக் கொள்கிறான். அங்கு இலட்சுமி என்ற அழகும் பண்புமுள்ள நங்கையின் காதலுக்கு உரியவனாகிறான். அவளை அடைய முயன்று பல்வகைத் தீங்குகள் புரிந்த தீயோர் கூட்டத்தை வென்று அகப்படுத்திச் சட்டத்தின் கையிற் கொடுக்கிறான். பின்னர் இலட்சுமியை மணம் புரிந்து வாழ்க்கையில் முன்னேறிப் பெரிய கப்பல் வணிகனாக வாழ்கிறான். வீரசிங்கனது வீர சாகசங்களைப் படிக்கும்போது 'தமிழ்த்திரைப்பட நாயகர்களது திரைச் சாகசங்கள்' நினைவுக்கு வருகின்றன.

வீரம், அறிவு, அன்பு, கருணை, ஒழுக்கம் என்பன நிறைந்த கதாநாயகன், அழகு, அன்பு, அறிவு, அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு என்பன நிறைந்த கதாநாயகி என்ற வகையில் காவியப் பண்புடனே பாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. கதாநாயகன் தனது அறிவாற்றலைத் தன் கூற்றாகவே புலப்படுத்தும் ஒரு சந்தர்ப்பத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சென்னை வித்தியாசங்கப் பிரவேசப் பரீட்சையில் தேறியிருக்கிறேன். தமிழிலே நிகண்டு, நாலடியார், திருக்குறள், நைடதம், பாரதம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய செய்யுட்களும் நன்னூலும் இலக்கண விளக்கமும் படித்திருக்கின்றேன்'

என்று கூறுகிருன். சின்னப்பபிள்ளை தமது புலமையை இக்கூற்றின் மூலம் காட்டுகிருர் எனலாம். அன்றியும் அன்றைய காலகட்டத்தில் மேற்கூறிய நூலறிவுடைய ஒருவனே அறிஞன் என்ற கருத்து சமூகத்தில் பரவலாக நிலவியதெனவும் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து படித்த நடுத்தர வர்க்கம் அரச பணி காரணமாகவும், வர்த்தக நோக்கிலும் குடாநாட்டை விட்டு வெளியேறி இலங்கையின் பல பாகங்களிலும் பரவியிருந்த சூழ்நிலை நாவலில் புலனுகின்றது. கதை நிகழும் இடங்களாக யாழ்ப்பாணம் தொடக்கம் அனுராதபும் வரையுள்ள நீண்ட வீதி — வன்னிப்பிரதேசக் காடுகள் — அனுராதபுரம் — மேன்றலை (மிகுந்தலையாக இருக்கலாம்) திருகோணமலை, திரியாய், தம்பலகாமப் பற்று, கொட்டியாரப்பற்று, கட்டுக்குளப்பற்று, கொழும்பு ஆகிய ஈழத்தின் பல பாகங்களும் அமைந்துள்ளன. ஆசிரியர் இப்பிரதேசங்களை எல்லாம் வலிந்து புகுத்தித் தமது புவியியலறிவைக் காட்ட முனைகிருர் போலும்.

பெரும்பாலும் உரையாடல் மூலமும் ஆசிரியர் கூற்ருகவும் அமையும் இந் நாவல் இலக்கணச் செறிவுடைய செந்தமிழ் நடையே பயில்கின்றது. இதனுல் பாத்திரங்களின் மெய்மை புலனுக முடியாமல் போகிறது. பண்டித மரபு பேணும் பண்பே ஆசிரியரிடம் காணப்படுகின்றது. மாடசாமி என்ற ஒரு இந்திய வேலையாளின் உரையாடல்கள் மட்டுமே நகைச்சுவையூட்டும் வகையில் பேச்சு மொழியிற் பயில்கின்றன.

'...ஆனையோடை மனிசன் என்னையா பண்றது? அதுவுந் தும்பியூதிக்கின்னு வரச்சே; எங்கசிமேலே ஆணையுமில்லே, அதோடை நம்பளவங்க சண்டை பண்ணவும் மாட்டாங்க; அந்தப் பிள்ளையாண்டன் வீட்டிலே சண்டை போட்டுக்கின்னு பிறப்பிட்டு வந்து ...இல்லாட்டிக் காட்டானை சூத்துக்கூப் பின்னுலே போய்க் குறுதையேறுவானு மனிசென்'

இந்தியாவில் ஆசிரியர் செவியுற்ற பேச்சு மொழியை நாவலில் புகுத்தியுள்ளமைக்கு மேற்படி மாடசாமி கூற்ருக வரும் பகுதி ஒரு எடுத்துக்காட்டாகும்.

'பாலைமரத்தின் பராரைச் சற்றேறக்குறைய இரண்டு பாகஞ் சுற்றளவுள்ளதாய் இருந்தபடியால் வந்த நால்வாய் மரத்துக்கிப்பால் நின்று தன்றேல் வாயை ஒருபக்கமாய் அவனைப் பிடிக்கக் கருதிப் போலும் நீட்ட......'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கதை கூறுவதாக வரும் இப்பகுதி அவர் கையாண்ட பண்டித மரபுத் தமிழ் நடைக்கு உதாரணமாகும். இதிலே பராரை (பருத்த அடிப் பாகம்) நால்வாய் (யானை) தோல்வாய் (துதிக்கை) முதலிய வழக்கிழந்த சொற்கள் பயிலக் காணலாம். மேலும் அரை நாழிகை வழிதூரம், எமனூர்தி, கடாவூர்தி, கலி, நாகம் (யானை) போன்ற சொற்கள் பரவலாகப் பயில்கின்றன. மருத்துவ டாக்டரைப் பண்டிதர் என்ற சொல்லால் ஆசிரியர் குறிப்பிடுகிறார். மேலும் விதான் கொஸ்தாப்பர் முதலிய தொழிற்றொடர்புடைய சொற்களும் பயில்கின்றன. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈழத்துத் தமிழ் வசன நடை பற்றி ஆராய்வாருக்குத் துணை புரியக்கூடிய வகையில் வீரசிங்கன் கதையின் வசனநடை அமைந்துள்ளது.

ஈழத்து மண்ணைக் களமாகக் கொண்டெழுந்த முதலாவது நாவல் என்ற பெருமையை 'வீரசிங்கன் கதை' க்கு நாம் கொடுத்தாலும் அதன் நாவலிலக்கியத் தரத்தை நோக்கும்போது அடிப்படையான பலவீனங்கள் பல புலப்படுகின்றன. ஆசிரியருக்கு நாவல்களை வாசித்தறிந்த அனுபவமிருந்திருப்பினும் நாவல்பற்றிய தெளிவான கருத்து உருவாகவில்லையென்றே கொள்ளவேண்டியுள்ளது. தமிழின் முதல் நாவலாசிரியரான வேதநாயகம் பிள்ளை முதலியவர்களைப்போல நாவலை வசன காவியம் என்ற அளவிலேயே உணர்ந்திருக்கிறார். இதனால் கதை சமூகத்தோடு ஒட்டாமல் வெறும் வீரசாகஸக் கதையாக அமைந்து விடுகிறது. மரபு வழி வந்த காவியச் செல்வாக்கே கதையிலும் கதைகூறும் பண்பிலும் காணப்படுகிறது. இடையிடையே பழந் தமிழிலக்கியச் செய்யுட்களையும் தாமே இயற்றிய செய்யுட்களையும் ஆசிரியர் புகுத்தியுள்ளமை செயற்கைத் தன்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது. மொழிநடை முன் கூறியதைப் போல மெய்மைக்குப் புறம்பானதாகின்றது. *கதையொன்று எழுத வேண்டும்; அக் கதை ஈழத்தில் நிகழ்வதாக அமைய வேண்டும்' என்ற அளவிலேயே அவர் நாவல் எழுதப் புகுந்துள்ளார். இதனால் கதைக்கான சமூகக் களம், பிரச்சினைகள் என்பன பற்றி இவர் சிந்திக்க வில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது, இவ்வகையில் இவரது சமகாலத்தவரான மங்களநாயகம் தம்பையா அக் காலப்பகுதியின் தரமானதொரு நாவலாசிரியையாகக் காணப்படுகிறார். அவரது நொறுங்குண்ட இதயம் நாவல் வீரசிங்கன் கதை வெளிவந்து ஆறாண்டுகளுக்குப் பின்பு வெளிவந்த போதும் அதனையே ஈழத்து மண்ணைக் களமாகக் கொண்டு நடப்பியல்புக்குப் பொருந்தியதாக எழுதப்பட்ட முதலாவது தமிழ் நாவல் என்று கொள்ளவேண்டியுள்ளது. வீரசிங்கன் கதையைப் பொறுத்தவரை அது ஈழத்து மண்ணைக் களமாகக் கொண்டதென்ற வகையிலும், அதனாசிரியர் ஈழத்து மக்களது வாழ்க்கையையும் பழக்க வழக்கங்களையும் இந்திய வாசகருக்கு விளக்கிக் காட்ட விரும்பிய வகையில் தேசிய உணர்வினால் உந்தப்பட்டவர் என்ற அளவிலும் ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் முதன்மை பெறுகின்றது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகோ கார்ஸியா

சிவா. சுப்பிரமணியம்

இந்து சமுத்திரத்தின் மத்தியிலே கன்னியா குமரிக்கும் மொறிஷியஸுக்கும் நடுவில் அமைந்துள்ள சாகோஸ் தீவுக் கூட்டங்களைச் சேர்ந்த தியாகோ கார்ஸியா தீவு உலக அபிப்பிராயத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்குகின்றது. 27 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட இச் சிறிய தீவுக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏற்பட்டதற்கான காரணத்தைப் பார்ப்போம்.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் தியாகோ கார்ஸியாவில் பிரமாண்டமான இராணுவத் தளம் ஒன்றை அமைத்து வருகின்றன. இத் தளம் தங்கள் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்பது இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளின் அபிப்பிராயம். இதனால், தியாகோ கார்ஸியாவில் தளம் அமைக்கும் நோக்கத்தைக் கைவிடும்படி இந்து சமுத்திரத்தின் கரையோர நாடுகளும், உலக சமாதானத்தை விரும்பும் ஏனைய நாடுகளும் ஐ. நா. சபை உட்படப் பல உலக மேடைகளிலிருந்தும் தொடர்ந்து விடுத்து வரும் வேண்டுகோள்களினால் பலன் எதுவும் ஏற்படவில்லை. அமெரிக்காவும் பிரித்தானியாவும் தங்கள் முடிவில் பிடிவாதமாக இருப்பது மட்டுமல்லாமல் தளமமைக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

உலக அபிப்பிராயத்தையே உதாசீனம் செய்து இவ்விரு நாடுகளும் தியாகோ கார்ஸியாவில் ஆர்வம் காட்டுவதற்கான காரணத்தை அறிய வேண்டுமானால் அத் தீவின் அமைப்பையும் வரலாற்றையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## அமைப்பு

இந்து சமுத்திரத்தில் சாகோஸ் தீவுக் கூட்டங்கள் அமைந்துள்ள பகுதி வருடம் முழுவதும் — எல்லாக் காலநிலைகளிலும் கப்பற் போக்குவரத்துச் செய்வதற்கு உகந்த ஒரு பகுதியாகும்.

தியாகோ கார்ஸியா தீவின் கரையோரப் பகுதிகள் கடல் கொந்தளிக்கும் காலங்களிலும் கப்பல்களைப் பாதுகாப்பாக நங்கூரமிடக்கூடிய இயற்கை வசதிகளைக் கொண்டிருக்கின்றன.

இந்து சமுத்திரத்திலுள்ள அமெரிக்கத் தளங்களுக்கிடையிலான போக்குவரத்துகளையும் செய்திப் பரிமாறல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு படுத்துவதற்கேற்ற வகையிலும், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலும் தியாகோ கார்ஸியா கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ளது.

ஆசியாக் கண்டத்தில் காலூன்ற முயற்சிக்கும் அமெரிக்கா, இராணுவ ரீதியாகச் சாதகமான இக் காரணங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றது. அமெரிக்காவின் பொதுப்படையான நோக்கங்கள் பிரித்தானியாவுக்கும் ஏற்புடையன.

தியாகோ கார்ஸியாவில் தளம் அமைப்பதற்கு இராணுவ காரணங்களே முக்கியமானவை. எனினும், பொருளாதார ரீதியான காரணங்களும் இல்லாமலில்லை

இந்து சமுத்திரம் வளம் நிறைந்தது என சமுத்திரவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். பல கோடி ரூபா பெறுமதியான துத்தநாகம், பித்தளை ஈயம், வெள்ளி, தங்கம் போன்றவை இந்து சமுத்திரத்தின் அடியில் ஆழ்ந்து கிடக்கின்றனவாம். இச் 'சமுத்திரச் செல்வங்கள்' நீரோட்டத்தினுல் இழுத்துச் செல்லப்பட்டு பல பகுதிகளுக்கும் சிதறுண்டு போகாது இருப்பதற்கேற்ற வகையில் பல இயற்கையான 'ஆழ்கடல் அணைகள்' இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளன. இந்த ஆழ்கடல் அணைகளைப் பொறுத்தவரையில் தியாகோ கார்ஸியா தீவுக்கருகிலிருந்து தொடங்கி தென் யேமனுக்கு அண்மையிலுள்ள சொகொத்ரா தீவுக்கு அருகில் முடிவடையும் கரிஸ்பேக் ஆழ்கடல் அணை பெரியதும் முக்கியமானதுமாகும்.

**வரலாறு**

16-ம் நூற்ருண்டில் போர்த்துக்கீசர் சாகோஸ் தீவுக் கூட்டங்களைத் தம்வசப்படுத்தினர். 17-ம் நூற்ருண்டில் அவற்றை ஒல்லாந்தர் கைப்பற்றினர். 18-ம் நூற்ருண்டில் ஒல்லாந்தரிடமிருந்து பிரான்ஸ் கைப்பற்றியது. 1810-ம் ஆண்டு இடம்பெற்ற கடுமையான ஒரு கடல் யுத்தத்துக்குப் பின் பிரான்ஸிடமிருந்து பிரித்தானியா கைப்பற்றியது. அதை தொடர்ந்து நீண்ட காலமாக தியாகோ கார்ஸியாவும் அதைத் சேர்ந்த ஏனைய தீவுகளும் பிரித்தானியாவின் கடல்கடந்த பிரதேசங்களாக இருந்தன.

சிறிது காலம் பிரித்தானியாவின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் இருந்துவந்த தியாகோ கார்ஸியா பின்னர் மொறிஷியஸுடன் இணைக்கப்பட்டது. 1968-இல் மொறிஷியஸ் சுதந்திரம் பெற்றபோது தியாகோ கார்ஸியாவும் அத்துடன்சேர்ந்து சுதந்திர தீவாக மாறுவதைப் பிரித்தானியா விரும்பவில்லை. தியாகோ கார்ஸியாவில் தளம் அமைப்பது தொடர்பான அமெரிக்க — பிரித்தானிய ஒப்பந்தம் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டிருந்ததுதான் காரணம். இதனுல், மொறிஷியஸுக்கு ஒரு சிறு தொகையை நஷ்ட ஈடாகச் செலுத்தி தியாகோ கார்ஸியாவைத் தொடர்ந்தும் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தது. தளம் அமைக்கும் உரிமைக்காக அமெரிக்காவிடமிருந்து பெற்ற பெருந்தொகையிலிருந்து ஒரு சிறு தொகையே நஷ்ட ஈடாகக் கொடுக்கப் பட்டது. அதன் பின், கிட்டத்தட்ட ஐநூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்கள் தியாகோ கார்ஸியாவிலிருந்து வெளியேற்றப்பட்டு மாலைதீவிலும் மொறிஷியஸிலும் குடியேற்றப்பட்டனர்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது தியாகோ கார்ஸியாவில் அமைந்திருந்த சிறிய விமானத் தளம் பயன்பட்ட விதம் பிற்காலத்தில் அங்கே பாரிய தளம் அமைக்கும் எண்ணத்துக்கு வித்திட்டது எனலாம். ஐம்பதுகளின் பிற்பகுதியில் அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையே தியாகோ கார்ஸியாவில் தளம் அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. இதைத் தொடர்ந்து, கூட்டாகத் தளம் அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தம் 1966-ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. 1970-இல் இந்த ஒப்பந்தம் கடற்படை, விமானப்படைத் தளம் அமைக்கும் விதத்தில் விஸ்தரிக்கப் பட்டது.

### சர்வதேசக் கோரிக்கை

தியாகோ கார்ஸியாவில் தளம் அமைப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஏறக்குறைய எல்லா இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளாலும் விடுக்கப்பட்ட கோரிக்கை நாளுக்கு நாள் கூடுதலான ஆதரவைப் பெற்று இன்று ஒரு சர்வதேசக் கோரிக்கையாகியுள்ளது.

1955 - இல் நடைபெற்ற பாண்டுங் மகாநாட்டில் இந்து சமுத்திரத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கத்தக்க வகையில் வல்லரசுகள் எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்று முதல் அண்மையில் இலங்கையில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாடு வரை இந்து சமுத்திரம் அமைதிப் பிராந்தியமாக்கப்படல் வேண்டும் என்ற வளர்முக நாடுகளின் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்துள்ளதுடன் இக்காலப் பகுதியில் அதற்கான ஆதரவும் வளர்ந்திருப்பதைக் காணலாம்.

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் முன் முயற்சியினால் 'இந்து சமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாகக் கருதும்படி எல்லா நாடுகளையும் கேட்டுக் கொள்ளும்' ஒரு தீர்மானம் 1971 டிசம்பர் 16-ந் திகதி ஐ. நா. சபையில் கொண்டு வரப்பட்ட போது சோவியத் யூனியன், சீனு உட்பட 61 நாடுகள் அத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. எந்த நாடும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஐ. நா சபையின் தீர்மானத்தையே உதாசீனம் செய்வதற்காக அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூறும் காரணம் விசித்திரமானது. இந்து சமுத்திரத்தில் சோவியத் யூனியனின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாலேயே தியாகோ கார்ஸியாவில தளம் அமைக்கின்றூர்களாம்! இது எவ்வளவுக்கு உண்மை எனப் பார்ப்போம்.

### சோவியத் ஆபத்து

'இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இராணுவம் அல்லது கடற்படைத் தளம் எதையும் எந்தக் காலத்திலும் சோவியத் யூனியன் வைத்திருக்கவில்லை. அத்தகைய தளம் எதையும் முன்னெருபோதும் அமைக்கவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை; இப்பொழுது அமைத்துக் கொண்டிருக்கவுமில்லை'

ஐ. நா. சபையிலுள்ள சோவியத் யூனியனின் நிரந்தரப் பிரதிநிதி 1974 யூன் 18-ந் திகதி ஐ. நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பிய ஏ/ஏசி. 159/9 என்ற இலக்கத்தையுடைய கடிதத்தின் ஒரு பகுதியே மேலே காணப்படுகின்றது. இந்து சமுத்திரத்தில் சோவியத் யூனியனின் தளங்கள் எதுவும் இல்லை என்பதை இக் கடிதம் தெளிவாக்குகின்றது.

சோவியத் யூனியனின் மூன்றிலொரு பகுதி ஆசியப் பிரதேசம். அதன் ஐரோப்பிய துறைமுகத்திலிருந்து ஆசிய துறைமுகத்துக்குச் செல்லும் கப்பல்கள் இந்து சமுத்திரத்திற்கூடாகவே செல்லவேண்டும். அத்தோடு, பல ஆசிய நாடுகளுடன் சோவியத் யூனியனின் வர்த்தக உறவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் இந்து சமுத்திரத்தில் அதன் கப்பல் போக்குவரத்து அதிகரிப்பது தவிர்க்க முடியாதது.

பதிலாக, பல அமெரிக்க இராணுவத் தளங்கள் இந்து சமுத்திரத்தில் உள்ளன. செங்கடல் ஓரத்தில் அமைந்துள்ள அஸ்மாரு தளம், பாரசீகக் குடாவிலுள்ள பஹ்ரீன் தளம், அவுஸ்திரேலியாவிலுள்ள கொக்பேர்ன் சவுண்ட் தளம் ஆகியவற்றை விசேடமாகக் குறிப்பிடலாம்.

தென் ஆபிரிக்காவில் சைமன்ஸ்ரவுண் என்ற பிரித்தானியத் தளம் ஒன்று உண்டு. அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து இந்து சமுத்திரத்திற்குள் வரும் கப்பல்களை இத் தளத்திலிருந்து கண்காணிக்கலாம். சிங்கப்பூரிலுள்ள பிரித்தானியத் தளம் பசிபிக் சமுத்திரத்திலிருந்து இந்து சமுத்திரத்திற்குள் செல்லும் கப்பல்களைக் கண்காணிக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றது.

இந்து சமுத்திரத்தில் பல தளங்களைக் கொண்டுள்ள அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஒரு தளமும் இல்லாத சோவியத் யூனியனின் 'ஆபத்தைச் சமாளிப்பதற்காகப் புதிதாக ஒரு பிரமாண்டமான தளத்தைக் கட்டிக் கொண்டிருப்பது வேடிக்கையான விஷயம்தான்!

அமெரிக்க வெளிநாட்டு இலாகாவிலுள்ள அரசியல்— இராணுவ அலுவல்கள் பிரிவில் அதிகாரியாக இருந்த 'செய்மோர் வெய்ஸ்' என்பவர் 197-ம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்க காங்கிரஸின் வெளிநாட்டு விவகார உபகமிட்டியின் முன் சாட்சியமளித்தார். அப்போது, 'இந்து சமுத்திரத்தில் சோவியத் யூனியன் தனது நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளுமானால் அமெரிக்காவும் தனது நடவடிக்கைகளைத் தளர்த்திக் கொள்ளுமா' என அவரிடம் கேட்கப்பட்டதற்கு 'இல்லை' என்று பதிலளித்தார். 'சோவியத் ஆபத்து' என்று கூறுவது ஒரு நொண்டிச்சாட்டு என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் எவ்வளவு காரணங்களைக் கற்பனையில் சிருஷ்டித்துக் கூறிய போதிலும் வளர்முக நாடுகளைப் பயமுறுத்திப் பணிய வைப்பதற்காகவே தியாகோ கார்ஸியாவில் தளம் அமைக்கப் படுகின்றது. ஆசியாவில் ஏகாதிபத்தியத்தின் அத்துமீறிய தலையீட்டிற்கு இது ஒரு அம்மணமான உதாரணம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் காதல் வரும்

க. சட்டநாதன்

அந்த 'அவசரத்' தந்தியைக் கண்டதும் அவள் ஊருக்குப் புறப்பட்டாள். தனது 'ஃப்ளாற்' றுக்குக்கூட அவள் போகவில்லை. கந்தோரிலிருந்து நேரடியாகவே கோட்டை புகையிரத நிலையத்தை அடைந்தவள், 11-55 உத்தரதேவியைப் பிடித்துக் கொண்டாள்.

சிவா — அவளுக்குக் கீழ் வேலைசெய்யும் உதவி அதிகாரி— துணைக்கு வருவதாக முதலில் ஏற்பாடு. ஆனால், நாளை மறுநாள் 'லேபர் மினிஸ்றியில்' உயர் அதிகாரிகள் கூட்டமொன்றில் அவளும் அவனும் கலந்து கொள்ள வேண்டும். அவள் இல்லாதவிடத்து அவனாவது கலந்து கொள்ள வேண்டாமா?

சிவாவுக்கும் யாழ்ப்பாணத்தில் ஏதோ அலுவல். அதனால், அவளுடன் போக விரும்பினான், முடியவில்லை. அவள் தனியாகவே புறப்பட்டாள். 'ஸ்ரேசன்' வரை வந்து இவளை வழியனுப்பினான்.

'எயர் கொண்டிசன்' இல்லாததால் இரண்டாம் வகுப்பில் பிரயாணம். அலுப்பாக இருந்தது. அலுப்பைப் பார்த்தால் முடியுமா? தந்தி. அதுவும் அவசரம்!

'என்ன அவசரம் இந்த அப்பாவுக்கு? அப்பாவுக்கு எப்பவும் அவசரம்தான்'

அப்பாதான் தந்தி கொடுத்திருந்தார்.

ஏறக்குறைய எட்டு மாதங்களுககுப்பின் இன்றுதான் அவள் ஊருக்குப் போகின்றாள். அங்கு போய் அந்தக் குடும்பச் சுமைகளுள் அழுந்தி கவலை கொள்வதிலும் பார்க்க, இங்கு கொழும்பில் — தனித்து அந்தச் சொந்தங்களில் இருந்து தொலைவுபட்டு, அந்நியமாக இருப்பது அவளுக்கு நிறைவு தந்தது.

இந்தத் தனிமையிலும் சிவா — அவனுடன் கொண்டுள்ள தொடர்புகள், அந்த அழுத்தமான அறிவு மிக்க இளைஞனின் தோழமை, அவளுக்கு வாழ்க்கையில் ஓர் அர்த்தத்தைக் கொடுக்கவே செய்கின்றன.

அந்த இளம் பிள்ளையின் அறிவுக் கூர்மையில் இவள் லயித்துப் போய்விடுகின்றாள். ஒரே ரசனைகள். ஒரே எண்ணங்கள். சுலபத்தில் கிடைக்குமா?

'ரேயி' ன் படங்களில் இவளுக்கு ஈடுபாடு. அவனுக்கு ரேயில் மட்டுமா? உலகச் சினிமா உயர் கலைஞர்களைப் பற்றி அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கிக்கொண்டு போகும் பொழுது, இவளுக்குப் பிரமிப்பாக இருக்கும்.

"சினிமா ஒரு அருமையான மீடியம். அதனை எவ்வளவு 'எஃப்க்ரிவ்' ஆகப் பயன்படுத்தலாம். பார்வையாளனை நேர் நிறுத்தி, அவனுடன் பகிர்ந்து கொள்ள எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன!'

அவன் தன்னை மறந்து பேசுவான்.

அப்பொழுது இவள் 'நீ ஒரு படம் எடேன்' என்பாள்.

"எடுக்கலாம்தான். 'ஃபிஞன்ஸ்' நீயா...?' என்று வேடிக்கையாகக் கேட்டுச் சிரிப்பான்.

கலை, இலக்கியம் என்று வந்துவிட்டால் அவன் மணிக்கணக்காகப் பேசுவான். தன்னை மறந்த லயிப்பில் பேசுவான். நவீன ஓவியமா, புனைகதையா, புதுக்கவிதையா எதுபற்றியும் அவனால் பேசமுடிந்தது. ஹென்றி ஜேம்ஸையும், ஜொய்ஸையும், மாக்ஸிம் கோர்க்கியையும் இவளுக்கு அறிமுகப் படுத்தியது அவன்தான்.

இவளுக்குக் கோர்க்கியை மிகவும் பிடித்துப்போய் விட்டது. ஜெயகாந்தனது ஆரம்ப காலக் கதைகளைப் படிப்பது போல் ஓர் அனுபவமது.

தமிழ் என்று வந்தால் மௌனியைப் பற்றியே அவன் அதிகம் பேசுவான். இவள் மௌனியை ஒருமுறைதான் படித்தாள். மீண்டும் படிக்க வேண்டும் என்று ஆர்வங்கொள்ளவில்லை.

புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி, டி. செல்வராஜ் இன்னும் புத்தம்வீடு, பள்ளிகொண்டபுரம், தலைமுறைகள் இவைகளை இவள் திரும்பத் திரும்பப் படித்திருக்கின்றாள்.

இவைபற்றியெல்லாம் அவர்கள் இருவரும் பேசும் பொழுது ஒத்து, முரண்பட்டு, மீண்டும் இணைந்து, தம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வார்கள்.

இது ஒருவகையில் ரசனையில் ஏற்பட்ட உறவுதான். அதற்கு மேல்? எதுவுமே சொல்ல முடியாத நிலை! அவளைப் பொறுத்த வரை அவன் சின்னப்பிள்ளை; இருபத்திரெண்டு வயது கூட நிரம்பவில்லை. அதற்குள் இவ்வளவொரு முதிர்ந்த ஞானமும் செருக்குமா? வியந்து போவாள்.

அவனுக்கு அவள் முப்பதைத் தொட்டவள் என்ற நினைப்பே இல்லை. அவ்ளது நீள் வட்ட முகம், அந்த அகன்ற கண்கள், அவற்றில் சுரந்து நிற்கும் கனிவு, அத்துடன் ஒரு கவர்ச்சி. கூந்தலா என்ன! அலை அலையாக காலைத் தொடுவது போல. அந்த நிறம்! அப்பா என்ன கலவை! மெலிதாய் உயரமாய் அவள் எவ்வளவு அழகு. கண்ணில் எப்பொழுதுமே வைத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கும்.

சிவா ஒருசமயம் அவளைக் கேட்டான்:

'வீமலா நீ எவ்வளவு அழகு! இன்னுமேன் கலியாணம் செய்யேல்லை"

"ஓ... கலியாணம்! அதற்கு அழகு மட்டும் போதுமா? அவள் வரட்சியான சிரிப்புடன் எங்கோ எதனையோ வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். அவள் கண்கள் கலங்கிவிடுகின்றன.

அந்த நிகழ்ச்சியின் பின், அவன் அவளிடம் அது பற்றி எதுவுமே பேசுவதில்லை; அப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப் பேசுவதே அவளுக்குத் துன்பம் தந்துவிடுமோ என்று அஞ்சினன்.

★

புகையிரதம் யாழ்ப்பாணத்தை அடைந்த பொழுது, நிலையத்தில் யாரும் அவளை அழைத்துப் போவதற்கு வரவில்லை. அவளுக்கு அது ஏமாற்றமாய் இருந்தது. அவள் வருவதை அறிவிக்கவில்லைத்தான். இருந்தும், அவள் வரவை எதிர்பார்த்து 'சும்மா' நிலையம்வரை வந்து போகக்கூடாதா?

அவள் தனியாக 'ராக்சி' யில் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

வீடு அமைதியாக இருந்தது. இடைக்கிடை அம்மாவின் விசும்பல் ஒலி. இவள் படி ஏறியதும் ரஞ்சிதான் ஓடிவந்தாள். அன்புடன் தழுவிக்கொண்டாள்.

ரஞ்சி இவளை அடுத்துப்பிறந்தவள்.

'அம்மா! அக்கா வந்திற்ரு'

ரஞ்சியை இவள் பார்த்தாள். அவளது கண்களும் அழுது சிவந்து கிடந்தன.

அப்பாவைக் காணவில்லை!

நடுக் கூடத்தைக் கடந்து, அதற்கு அப்பாலிருந்த அறையினுள் நுழைந்தவள்:

'ரஞ்சி உன்ரை ரெஸ்ஸிங் கவுணைக் கொடு...... நான் கந்தோரிலை இருந்து நேர வாறன்'

சேலையை உருவி எறிந்தவள் கவுணை வாங்கிக்கொண்டாள்.

அறையின் மூலையில் கிடந்த கட்டிலில் சுசி, ராணி, சக்தி — ஒருவர்மேல் ஒருவர் கால்களைப் போட்டுக் கொண்டு, அயர்ந்து போய்க் கிடந்தார்கள்.

மூவரும் இந்துவை அடுத்து வரிசைக்கிரமமாகப் பிறந்தவர்கள்.

'ரஞ்சி, குழந்தையள் ஏன் தாறுமாருக் கிடக்குதுகள்; ஒழுங்கா வளத்தக் கூடாதா?'

'இஞ்சை எதக்கா ஒழுங்கா இருக்குது.. ...? எல்லாம் தாறுமாறுதான்'

'என்ன, என்னடி சொல்லுறை?'

அப்பா காறித்துப்புவது கேட்டது.

'அப்பா வந்திருக்கிருர் போலை... பெரியமாமா வீட்டை போனவர்'

அவள் உடைமாற்றி கொண்டு வெளிவிருந்தைக்கு வந்தபொழுது அம்மா, அப்பா, இந்து, சரஸ் எல்லாரும் அங்கே இருந்தார்கள்.

சரஸ் இந்துவுக்கு முன் பிறந்தவள்.

அவளது மூன்ருவது தங்கை சித்திராவை மட்டும் அங்கு காணவில்லை!

இவள் கேட்டாள்: 'அம்மா சித்திரா எங்கை காணேல்லை?'

'சித்திரா...?' அம்மா விம்மத் தொடங்கிவிட்டாள். அவள் குலுங்கிக் குலுங்கி அழுவது பரிதாபமாக இருந்தது.

அப்பா சொன்னர்.

'அந்தப் பாதகி தில்லையர் வீட்டிலை வேலை செய்துகொண்டிருந்த தோட்டக்காட்டுப் பொடியன் வேலாயுதத்தோடை ஓடீற்ருள் பிள்ளை'

அவரும் விம்மினர்.

இந்த இடியை அவளால் நம்ப முடியவில்லை. எப்படி அவளால் நம்ப முடியும்? அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்து இந்துவையும் சரஸை யும் பார்த்தாள்.

அவர்கள் இருவரும் எழுந்து உள்ளே போனார்கள். அப் பொழுது, படலை விடும் சத்தம் கேட்டது.

அப்பா கேட்டார் 'யாரது?'

'நான்தான் அத்தான்!'

பெரிய மாமாவும் அவற்ரை மூத்த மகன் சண்முகம் அத்தா னும் வந்தார்கள்.

மாமா கால் மடக்கி உட் காரமாட்டார். ரஞ்சி கதிரை ஒன்றை இழுத்துப் போட்டாள்; மாமா உட்கார்ந்து கொண்டு ஒரு களைப்புடன் பேச ஆரம் பித்தார்.

'இஞ்சை பிள்ளை...... இது குடும்பத்திலை பெரிய தலைக்கு னிவு...... நானும் பொம்பிளைப் பிள்ளையளை வச்சிருக்கிறன். உன்ரை சின்னமாமா, உவன் தம்பி பசுபதிக்கும் இரண்டு குஞ்சுகள். உன்ரை அப்பன் தப் பாமை வரிசையா பெட்டைய ளையே பெத்து வச்சிருக்கிறுன். இனி இதுகளுக்கு கலியாணம் காத்திகை எண்டு ஏதேனும் செய்யேலுமே...? பெரிய தலை குனிவை ஏற்படுத்திப் போட் டாள் அந்த ஒடுகாலி. இப்பிடி அமரிலை தோட்டக்காட்டா னேடை ஓடுவாள் எண்டு நான் நினைக்கேல்லை. எங்கடை குடும்ப மென்ன லேசுப்பட்டதே......... தாவாடிக்காரர் எண்டா எவன் மாப்பிளை கொடுக்கமாட்டான். விழுந்தடிச்சுக் கொடுப்பாங் களே. இவள் விசரி, அவசரப் பட்டிட்டாள். என்ன பிள்ளை...? நீ இந்தா முப்பது வயசாச்சு... 'சிவனே' யெண்டு இருக்கேல் லையே. நடக்கிறதெல்லாம் விதிச்சபடி நடக்கும். அதுக்கு அவசரப்படுறதே? அதுவும் இப் பிடி மானக்கேடாய். இதுக்கு என்ன செய்யப்போறை பிள்ளை? இதை இப்பிடியே விடேலுமே? பொலீசுக்கு அறிவிப்பமெண் டால் அவள் 'மேஜர்' ஒண்டும் செய்யேலாது எண்டு இவன் சண்முகம் சொல்லுறுன். அது வும் சரிதான். பொலிஸ்கிலிஸ் எண்டு போறதும் சரியான கிரிசைகேடு'

சண்முகம் குறுக்கிட்டுச் சொன்னுன்.

'பொலீஸ் எண்டு போகே லாது. எதுக்கும் ஒருக்கா பெரிய கமத்துக்குப் போய்ப் பாக்கலாம். பெரிய கமத்திலைதான் வேலாயு தத்தின்ரை தாய் தகப்பன் இருக்குதுகள். பெரியகமம் கிளி நொச்சியிலைதான். கரடிப்போக் கிலை இருந்து கிழக்கை ஒரு கட்டை தூரம் இருக்கும்'

'அப்பிடியே? அப்ப நாளைக் காலையிலை முதல் வேலையா அதைப் பாருங்க. அவள் அங்கை இருந்தா அவளை இழுத்துக் கொண்டு வாருங்க. அதை முத லிலை செய்யுங்க. விஷயம் காதும் காதும் வைச்சாப்பிலை நடக்க வேணும். ஊருக்கை சங்கதி தெரியாது. சந்தி சிரிக்கமுந்தி விஷயத்தை முடிச்சிற்று நல்லம். இல்லை, எல்லாரும் தலையிலை சீலையைப் போடவேண்டியது தான்'

மாமாவும் சண்முகமும் அத் தானும் விருந்தையை விட்டு இறங்கினுர்கள்.

அப்பா கேட்டார். 'விமலா நீ எத்தனை நாள் லீவிலை வந்தனி'

'நான் இஞ்சை கனநாள் நிக்கேலாதப்பா. நாளையின் டைக்கு மினிஸ்ரரின்றை கூட்டம் ஒண்டு இருக்குது. நாளைக்கே நான் போகவேணும்'

'நாளைக்கா...? இதுக்கொரு முடிவு காணுமலே?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதுதான் அவள் தீர்க்கமாய் முடிவெடுத்திற்ருளே...... நாமென்ன செய்யேலும்'

வெடுக்கெனச் சொல்லிய விமலா ரஞ்சியைப் பார்த்து;

'அந்தச்சோப்பை எடம்மா. லாம்பையும் எடுத்துக் கொண்டு கிணத்தடிவரைக்கும் வா'

தங்கை தண்ணீர் அள்ளிக் கொடுக்க இவள் தலையில் ஊற்றிக் கொண்டாள்.

'என்னக்கா இது... குளிரில்லை, நேரம் கெட்ட நேரத்திலை தலையிலை ஊத்திறை'

'இந்தக் குடும்பத்தையே தலைமுழுகப் பாக்கிறன் முடியேல்லை. இதையாவது செய்யக் கூடாதா?'

ரஞ்சி விக்கித்துப்போய் நின்ருள். அவள் கண்களில் நீர் முட்டி மோதித் திரண்டு உதிர்ந்தது.

'ரஞ்சி அழாதை. நான் இஞ்சை வராமல் கொழும்பிலை நிக்கிறது இதுக்குத்தான். இந்தச் சுமையளை என்னாலை தாள முடியாதடி. எடுக்கிறதிலை என்ரை செலவுபோக மிஞ்சிறதை அப்பிடியே அனுப்பிப் போட்டு அங்கை சிவனே எண்டிருக்கிறது எனக்கு எவ்வளவு நிம்மதி தெரியுமா? பிள்ளையளைப் பெத்தா மட்டும் போதுமே. அதுகளுக்கு உரிய வயதிலை செய்யவேண்டியதைச் செய்ய வேண்டாமே. செய்யாவிட்டால் சித்திரா என்னடி நானும் யாரையும் இழுத்துக்கொண்டு ஓடத்தான் ஓடுவன். கண்டறியாத குலப்பெருமை பேசுகினை. அவர் பெரிய மாமா, கொம்புமுளைச்ச சாதி வெள்ளாளர். அட, அவற்ரை பெருமை! என்ன பெருமையோ......... பீத்தல் பெருமை! தாவாடிக்கார ரெண்டா மாப்பிளை கொடுக்கப் போட்டி போடுவினையாமே? எங்களுக்கு அப்பிடி ஒரு மாப்பிளை குதிரேல்லையே. தாவாடிக்காரியின்ரை மூத்த பேத்தி — எனக்கு எத்தனை வயசு, உனக்கு எத்தனை வயசடி, எங்கடை மூத்த மச்சாளுக்கு எத்தனை வயசு. நாங்களெல்லாம் கிழடு தட்டிப் போகேல்லை?

ஆவேசம் வந்தவளாக அவள் கத்திஞள்.

ரஞ்சிக்கு இது புதுமையாக இருந்தது. அக்கா இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டது அவள் கண்டதில்லை. எதையுமே அநாயாசமாக ஒதுக்கித் தள்ளிவிட்டுப் போகும் அவள் இன்று இப்படி......

ரஞ்சி அவளை உட்கார வைத்து தானுகவே அவளது தலையில் தண்ணீரை அள்ளி ஊற்றிஞள். இந்தத் தண்ணீராவது அக்காவின் மனதைக் குளிர வைக்காதா? என்ற ஆதங்கம் அவளுக்கு.

விமலா இப்பொழுது சற்றுத் தணிந்தவளாய்க் கேட்டாள்.

'ரஞ்சி அம்மாவைப் பாத்தன். அவ ஒரு மாதிரியா இருக்கிறு... ஏதென் சுகமில்லையே?'

'ஓம் அக்கா. அவவுக்கு இதுதான் பெறுமாசம்!'

'என்ன, என்னடி சொல்லுறை? இன்னுமா அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஆசை அவியேல்லை. அவள் சித்திரா சிறிசு. பாவம்... ஒடிஞ என்னவாம். நான் நாளைக்கே கிளிநொச்சிக்குப் போய், நீ செய்ததுதான் சரி எண்டு சொல்லீற்று, கொழும்புக்கு ஓரேயடியாய்ப் போறன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லே, இந்தக் குழந்தை ஆண் குழந்தையாத்தான் இருக்குமாம்! கந்தசாமிச் சாத்திரியார் சொன்னவர்'

'ஓ! ஆண்வாரிசே. பெத்த எட்டுப் பெட்டையளுக்கும் உழைச்சுச் சீதனம் கொடுக்கத் தம்பி வரப்போருனே?'

'அக்கா சத்தம் போடாதை'

'ஏன், ஏனடி? அவள் மீண்டும் கத்திஞள்.

'இதுக்குச் சரியான கிஸ்ரீரியாதான்'

விமலா உடை மாற்றிக் கொண்டு, விருந்தையை ஒட்டி இருந்த, கீழ்ப்புற அறையில் நுழைந்து கதவை அடித்துச் சாத்திஞள்.

அவள் கொழும்பிலிருந்து வந்தால் அந்த அறையில்தான் தங்குவது வழக்கம்.

ரஞ்சி பலமாக இரண்டு முறை கதவைத் தட்டிப் பார்த்தாள் பதில் இல்லே.

'அக்கா பாவம். கொழும்பாலே வந்து தண்ணிகூடக் குடிக்கேல்லே'

அவள் பேசாமல் போய்க் கூடத்துக்குள் அம்மாவுக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டாள்.

எப்பொழுது விழித்தாள் என்று தெரியாது 'ரஞ்சி, ரஞ்சி' லேசாகக் கூப்பிடுவது கேட்டது. வெளியே வந்து பார்த்தாள்.

பிச்சிமர நிழலில் சண்முகம் அத்தான்!

அவள் அவனது மார்பினுள் புதைந்து விசும்பிஞள்.

அவளே சண்முகம் ஆதரவாக அணைத்துக்கொண்டு கேட்டான்.

'மரவள்ளித் தோட்டத்துக்கை போவமே'

'ஊ ஹூம்...... வேண்டாம்' ரஞ்சியின் போலிச்சிணுங்கல்.

★

முல்லேத்தீவு பஸ்ஸில்தான் அவர்கள் பிரயாணம் செய்தார்கள். 'விமலா போனல்தான் அவள் பயப்படுவாள். அவளும், சண்முகமும் பெரியகமத்துக்குப் போய் வரட்டும்' இது வீட்டுப் பெரியவர்களுடைய முடிவு.

பஸ் கரடிப் போக்கில் தரித்தபொழுது, சண்முகமும் விமலாவும் இறங்கிக் கொண்டார்கள்.

சண்முகம் கேட்டான்.

'கார் பிடிச்சுக் கொண்டு பெரிய கமத்துக்குப் போவமே?'

'வேண்டாம் அத்தான்! ஒரு கட்டைதானே நடந்துபோவம்'

இருவரும் நடந்தே போனூர்கள்.

வீதி சற்றுக் குறுகலானது; குண்டும் குழியுமாக இருந்தது.

'இந்த ரோட்டுக்கு வடக்காலே இருக்கிற கமம்தான் சதாசிவத்தாற்றை ஐம்பதோ அறுபதோ ஏக்கர். பயிரைப்பார் என்னமாதிரி பச்சைப் பசேலென்று......!'

'நம்ம நொச்சிக்காட்டுச் சுறுக்கற்ரை கமமே. நல்லாத்தான் இருக்குது. அவருக்கு என்ன குறை. இரண்டு பெட்டையள். நம்ம சித்திராவின்ரை வயசுதான் மூத்த பெட்டைக்கு. மற்றவளுக்கு இருபதுகூட நிரவேல்லே. இரண்டு பெட்டையளும் முடிச்சு நல்லா இருக்குதுகள்'

'உனக்கொண்டு சொல்லட்டுமே... உனக்குத்தான் முதலிலே சொல்ல வேணுமெண்டு நினேச்சனுன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தானின் கறுத்த முகத்தில் செம்மைப் பூரிப்பு, அவள் அவரை அதிசயமாகப் பார்த்து நின்ருள்.

'இல்லே விமலா எனக்கு ரஞ்சியிலே சரியான விருப்பம். அவளுக்குந்தான். நீதான் உங்க அப்பாட்டைச் சொல்லவேணும்'

'காதலா?'

'இல்லே, அப்பிடி ஒண்டுமில்லே... ஒரு விருப்பம். அவள் தான் உங்களிலே ஒரு பெரிய சொத்துமாதிரி'

'அப்ப நான்?'

'...............'

'என்னத்தான் பேசாமல்...'

'நீ என்ன விமலா! எங்கடை குடும்பத்திலே பெரிய படிப்பெல்லாம் படிச்சு, உதவிக் கொம்மிசனரா வேலை இருக்கிறை. உனக்கென்ன குறை. உனக்கொரு மாப்பிளே கிடைச்சிட்டா எங்களுக்கெல்லாம் எவ்வளவு சந்தோஷம் தெரியுமே. அவள் ரஞ்சி சொல்லுருள் அக்காவுக்குச் சடங்கு நடந்துதான் எதுவுமெண்டு'

'ஓ! எனக்கு நடந்து முடிஞ்ச பிறகுதான் உங்கள் கலியாணமா? அத்தான்! எனக்கொரு தம்பி பிறக்கப்போருன். அவன் உழைச்சு எனக்குச் சீதனம் தருவான். அப்ப என்ரை கலியாணம் நடக்கும். அதுவரைக்கும் பொறுமையா உங்களாலே இருக்க முடியுமா? அவள் ரஞ்சி வனுகெட்டி இருந்தாலும் இருப்பாள்!'

'சீ... என்ன மாமி கர்ப்பமே! இந்த வயசிலேயே? சும்மா பேய்க் கதை பேசிறை'

'உண்மை அத்தான், உங்களுக்கொரு குட்டி மச்சான் பிறக்கப் போருன்! உங்களுக்கு மாப்பிளேத் தோழன் வேண்டாமே!'

அவள் சிரித்தாள். ஜீவனற்ற சிரிப்பு.

'அதோ ஒரு பெரிய கல்வீடு ரோட்டுக்குத் தெற்குப் பக்கம் தெரியுதே அதுதான் பெரிய கமம்'

இருவரும் மௌனமாக நடந்தார்கள்.

அந்தக் கல்வீடு பூட்டிக் கிடந்தது. வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு குடிசை. குடிசையின் முன் ஒரு கிழவன் இள வெய்யிலில் சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்தான். அவனே அணுகிய சண்முகம்,

'அப்பு! இதுதானே வேலாயதத்தின்ரை வீடு. வேலாயுதம் இருக்கிருனே?'

'ஏய் பிள்ள! இஞ்ச யாரோ வேலாயுதத்த தேடிக்கிட்டு வந்திருக்காங்க வந்து பாரு'

மெலிந்த, சற்று வயது போன ஓர் உருவம் குடிசையிலிருந்து வெளியே வந்தது. வேலாயுதத்தின் தாயாக இருக்க வேண்டும். அவளேத் தொடர்ந்து ஒரு சிறு பெண். பதினேந்து — அல்லது பதினுறு வயதுதான் இருக்கும். ஊர் அம்மன் கோயில் சிலேமாதிரி மூக்கும் முளியுமாய், செதுக்கியெடுத்த வடிவம்.

'ஓ! இளமை எவ்வளவு வடிவு' விமலா புல்லரித்துச் சிலிர்த்தாள்.

'வேலாயுதம் இருக்கிருனு?'

'இல்லேங்க தம்பி. அவன் வேலணயில. பாவம், இந்தப் பிள்ள, இவளக்கூட இஞ்சவந்து ரெண்டு கிழமையா பாக்கல்லேங்க.

'இவள்!'

'அவன் சம்சாரமுங்க; என்ர அண்ண பொண்ணுங்க'

'அவரு அங்க இல்லிங்களா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் கலங்க அந்தப் பெண் சண்முகத்தை விசாரித்தாள். அவள் உடல் லேசாக நடுங்குவதைப் பார்த்த விமலா,

'இல்லைத் தங்கச்சி. நாங்க சும்மா இஞ்சை ஒரு அலுவலா வந்தனுங்க, வேலாயுதத்தைக் கூட்டிக் கொண்டு போனு சுலபமா இருக்குமெண்டு நினைச்சம். அதுதான் அவனைப் பாக்க வந்தம்'

'என்னுங்கம்மா..... என்ன காரியமாகணும்? நாங்க உதவி பண்ணேலுங்களா?' வேலாயுதத்தின் தாய்.

'இல்லை யாச்சி வேண்டாம்'

அந்தச் சிறு பெண் கண்களை அகல விரித்து இமைகள் 'பட்டாம் பூச்சி போலப் படபடக்கச் சொன்னாள்.

'மச்சானைக் கண்டாக்க..... ஒருக்கா இங்கிட்ட வந்துபோகச் சொல்லுங்க'

அதில் தொனித்த ஆர்வமும், தாபமும் விமலாவை என்னமோ செய்தது.

அவர்களிடம் இருந்து விடை பெற்று, வெளியே வந்தபொழுது விமலா சண்முகத்தைப் பார்த்துச் சொன்னாள்.

'அத்தான்! அந்தப் பெட்டையைப் பாத்தியளா. எவ்வளவு ஆர்வத்தோடும் ஏக்கத்தோடும் வேலாயுதத்திற்காகக் காத்திருக்கின்றாள், இவளுக்குத் துரோகம் செய்ய அவனால் முடியுமா? அந்தத் துரோகத்துக்குச் சித்திரா உடந்தையா? இருக்காது. இருக்கவே இருக்காது'

'இருக்கக் கூடாது என்பது தானே விமலா எங்களை எல்லாற்றை விருப்பமும்'

'அத்தான்! நான் இங்கிருந்தே கொழும்புக்குப் போகலாமெண்டு நினைக்கிறன். வந்த காரியமும் முடியேல்லை. எதுக்கும் இரண்டொரு நாள் பொறுப்பம். விஷயம் வெளிச்சத்துக்கு வராமலே போகும்? முக்கியமான கொன்ஃபிரன்ஸ், நான் கொழும்பிலை நிக்கவேணும். நான் போயிற்று உடனை திரும்பிறனே'

'சரி விமலா'

'இஞ்சை ஒரு •லேபர் டிஸ்பியூட்' விஷயமா வில்சன்ரேட் வரை போக வேண்டியிருக்குது. நீங்களும் ரவுணுக்கு வாருங்க. நான் ஒண்டரை மணியளவில தான் 'றெயின்' எடுக்கேலும்... நீங்க அதுவரைக்கும் சுணங்காம ஊருக்குப் போங்க'

அவர்கள் இருவரும் கிளிநொச்சி ரவுணை நோக்கி நடந்தார்கள்.

★

சிவா ஸ்ரேசனுக்கு வந்திருந்தான், அவள் எதிர்பார்க்கர்த ஒன்று!

'நான் நாளை யாழ்தேவியிலை வந்தாலும் வருவன். எதுக்கும் ஒருக்கா வந்து பாரேன்' என்றதற்கு இவ்வளவு மதிப்பா!

அவள் வண்டியைவிட்டு இறங்கியதும் அவன் கேட்டான்,

'என்ன தந்தி?'

'அதுவா...? அம்மாவுக்கு ஒரு ஆண்குழந்தை பிறக்கப் போகுது! அதுதான் அப்பா தந்தி அடிச்சவர்'

'என்ன! அப்பிடிச் சரியா ஆண்குழந்தை என்கிறாய், பிறக்க முந்தியே'

'எட்டுப் பெட்டையளுக்குச் சீதனம் தேட ஆண்வாரிசு வேண்டாமே? அதுதான்'

'ஓகோ! அதுக்கா? சரிதான்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிரித்தான். அவளும் கல கலவென்று சிரித்தாள்.

மனம் மிகவும் லேசானது போன்ற உணர்வு.

ஸ்ரேசனை விட்டு வெளியே வந்தவர்கள், ஒரு ராக்சியில் ஏறிக்கொண்டார்கள். ராக்சி ரைவரிடம் அவன் சொன்னுன்:

'பம்பலப்பிட்டியா...... பிப் பின்லேன்'

வழமைக்கு விரோதமாக அவன் பின்சீற்றில் — அதுவும் அவளுக்குப் பக்கத்தில் நெருக்க மாக உட்கார்ந்து கொண்டான்.

அவளுக்கு அதிசயமாக இருந்தது.

'என்ன, குடிச்சனியா? மணக்குது'

'நோ...' அவனது அசட்டுச் சிரிப்பு.

'விமல், உன்னட்டை ஒரு விஷயம் கதைக்க வேணும். சும்மா கதைக்க முடியுமா? குடிச்சாத்தான் முடியும் போலை இருந்தது. அதுதான்...'

'டோன் பி சில்லி'

'ஓ..., மறந்து போனேன். உனக்கு இரண்டு 'பேர்சனல் லெட்டர்ஸ்' கந்தோருக்கு வந்தது. கொண்டுவந்தனுன்.

அவன் கடிதங்களை எடுத்து இவளிடம் கொடுத்தான்'

ஒரு கடிதம் அவளது சிநேகிதி எழுதியது. மற்றக் கடிதத்தைப் பார்த்தாள். சித்திரா எழுதியிருந்தாள். அவள் பதட்டத்துடன் கவரை உடைத்து ராக்சியின் 'ஹுட்' லயிற் வெளிச்சத்தில் படித்தாள். கடிதத்தில்,

'அக்கா! நான் இதைத் துணிஞ்சுதான் செய்யிறன். அவரை உனக்குத் தெரியும். சரவணை மாஸ்ரரின்ரை மகன் குணம்தான். ஷுகர் கோப்பரேசனிலை வேலை செய்யிருர். வேலாயுதம்தான் என்னைக் கூட்டிக்கொண்டு வந்து அவரிட்டை ஒப்படைச்சவன். இது அவற்றை ஏற்பாடு. அவன்ரை உதவி இல்லாட்டி நான் அந்த நரலுக்கையிருந்து தப்பேலாமப் போயிருக்கும். இரண்டொரு நாளையிலை பதிவுத்திருமணம். முடிஞ்சா நீயும் வாவன். அறிவிப்பன். எனக்கொருத்தற்றை ஆசியும் வேண்டாம். உன்றை ஆசி வேணுமக்கா'

சுருக்கமான கடிதம். விமலாவுக்கு எல்லாமே விளங்கியது.

'இவன் குணம்தானே...... கோவியப் பொடியனெண்டு அப்பா அம்மா துக்கப்படுவினை. கண்டறியாத சாதி. இப்ப ஆர் சாதி பாக்கினை. எல்லாம் ஒண்டு தான். ஏதோ உத்தியோகம் பாக்கிற பொடியன்தானே...... சாதி அந்தத் தகுதிக்கை மறைஞ்சு போகாதே. சின்ன வயதிலை கண்டது. இப்ப அவன் எப்பிடி இருக்கிருனே? இவள் சித்திரா அவனை எங்கை கண்டு பிடிச்சாள். ஓ! இவளும் அவனும் ஒரு வகுப்பிலைதானே படிச்சவை. அப்ப தொட்டே.....! சித்திரா துணிஞ்ச பெட்டை தான்'

அவள் நிம்மதிப் பெருமூச்செறிந்தாள்.

'என்ன விமலா?'

'..................'

'விமலா ஒரு நிமிடம் ராக்சியை நிறுத்தட்டுமே, உனக்கொரு டினர் பாக்கெற்'

'நோ... 'ப்றொயிலர்' ஒரு இருத்தல் வாங்கு, உனக்குச் சாப்பாடு இண்டைக்கு என்ரை டைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சரி. உன்ரை விருப்பம்.

'ஷாரஸு' க்கு அண்மையில் ராக்சியை நிறுத்தியவன், 'ப்றொயிலரோடும்' இரண்டு போத்தலோடும் வந்தான்.

'என்ன போத்திலது...?'

'ஸ்ரவுட்'

'பூ! ஸ்ரவுட் குடிகாரன் தானு நீ! நான் என்னமோ ஏதோண்டு பயந்திட்டன்'

'எனக்கு இதுதான் பிடிக்கும். அதுவும் இருந்திட்டுத் தான்'

ராக்சி பிப்பின்லேனில் நுழைந்து இடதுபக்கமாக மூன் ருவது வீட்டின் முன் நின்றது.

அது மாடிவீடு. விமலா மாடியில்தான் குடியிருந்தாள். மாடி முழுவதுமே அவளுக்குத் தான்.

அவளது வரவேற்பறை கச்சிதமாக இருந்தது. அழகாகவும், அவளது ரசனைக்கேற்பவும் இருந்தது, வரவேற்பறையை ஒட்டி மேற்கே இரு அறைகள். கிழக்குப்பக்கமாக 'கிச்சன்' 'அற்றாச் பாத்' எல்லாம் இருந்தன.

'சிவா! 'ரேக் ரெஸ்ற்' ஒரு நிமிஷத்திலே குளிச்சிட்டு வாறன், வந்து உனக்குச் சமைத்துப் போடிறனே'

'சமையல் எனக்கு இண்டைக்கு மட்டுந்தானு?'

அவள் — அவனை என்ன என்பதுபோல் பார்த்து நின்ருள்.

'விமல்...! டியர்... நான் உன்னை... நீ எனக்கு வேணும்' சொற்கள் தடுமாற அவளை அவன் நெருங்கினுன்.

'சிவா டோன்பி சென்றி மென்ரல். இதைச் சொல்லத்

---

பாரிசிலிருந்து பிரசுரமாகும் 'இண்டர் நேஷனல் ஹெறால்டு டிரிபியூன்' என்ற இதழில் கீழ்க் கண்ட விளம்பரம் வந்துள்ளது; மாட்சிமை மிக்க மன்னர்' என்ற பட்டத்தைத் தாங்கும் உரிமையுள்ள ஜெர்மன் இளவரசர், புதிய வணிக முயற்சிகளுக்குத் தன் பெயரை இரவல் கொடுக்கத் தயாராயிருக்கிருர். அக்கறையுள்ளவர்களின் விவரமான விண்ணப்பங்கள் மட்டுமே கவனிக்கப்படும்'

---

தான் நீ இண்டைக்குக் குடிச்சனியா?'

'யேஸ்'

அவள், தன்னை நோக்கி வாஞ்சையோடு நெருங்கிவரும் அவனையே பார்த்தபடி நின்ருள்; அவள் கண்கள் பனித்தன.

'விமலா! டோன்பீ சென்ரி மென்ரல்' — இது அவன்:

விமலா உணர்ச்சிவசப்பட்டவளாய் அவனை அணைத்து, அவனது கண்கள், கன்னங்கள், உதடுகள் என்று மாறி மாறி முத்தமிட்டாள். பின்பு சொன்ஞள்,

'பிளீஸ் சிவா ஸ்ரே வித் மீருநைற்'

'நோ. அந்த சேயிங் என்ன? ஆக்கப் பொறுத்தவன்...'

'ஆறப்பொறுக்கக் கூடாதா'

'சோ...'

இருவரும் குலுங்கிச் சிரித்தார்கள். இறுக்கம் குலைந்த அந்தச் சிரிப்பில் எவ்வளவு நிறைவு? ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயியும் வழிப்போக்கனும்

விவசாயி ஒருவன் விறகு வெட்டிவர காட்டுக்குப் போனுன். அவன் ஒரு மரத்தின் மீது ஏறினுன். அம்மரத்தின் கிளையின் நுனியில் உட்கார்ந்துகொண்டு, அக்கிளையின் அடிப்பாகத்தை வெட்டத் தொடங்கினுன்.

அவ்வழியாக ஒருவன் போய்க்கொண்டிருந்தான். அவன் 'ஏய் கவனமாக இரு. இல்லாவிட்டால் நீ கீழே விழுந்துவிடுவாய்'

மடத்தனமாகப் பேசாதே' என்று கூறிவிட்டு விவசாயி தன் கோடரியால் மரக்கிளையை ஓங்கி வெட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று மரக்கிளை முறிந்தது. அவன் கிளையுடன் 'தொப்' என்று விழுந்தான். பிறகு சுற்றுமுற்றும் பார்த்தான். வழிப்போக்கனைக் காணவில்லை.

'அவன் ஒரு சூனியக்காரனுக இருக்க வேண்டும்! அவனை எப்படியாவது கண்டுபிடித்தாக வேண்டுமே! கிளை முறிந்து விழப்போகிறது என்பதை அவன் எப்படி அறிவான்! அவனைக் கண்டுபிடித்து என் மனைவியின் பெயர் என்ன என்று நான் கேட்கப்போகிறேன்.

அவன் அங்குமிங்கும் ஓடி எப்படியோ அந்த வழிப்போக்கனைப் பிடித்துவிட்டான். 'என் மனைவி அகாபியா இருக்கிருளே, அவள் பெயர் என்னவென்று உமக்குத் தெரியுமா?' என்று கேட்டான்.

வழிப்போக்கன் சிரித்துக்கொண்டே கூறினுன். 'அகாபியா'

விவசாயி ஸ்தம்பித்து விட்டான். 'உண்மையிலேயே இவன் சூனியக்காரன்தான்' என்று எண்ணியவாறு, இரண்டாவது கேள்வி கேட்டான். 'என்னிடம் எத்தனை பசுக்கள் உள்ளன என்று சொல் பார்க்கலாம். சிவப்பு மாடும், கறுப்பு மாடும் கறக்கின்றன. ஆனுல் வெள்ளை மட்டும் கறப்பதில்லை'

'ஓகோ! அப்படியானுல் உன்னிடம் மூன்று பசுக்கள் இருக்கலாம்'

விவசாயி ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தான்.

'சரி, நான் எப்பொழுது இறந்து விடுவேன் என்று சொல்லேன் பார்க்கலாம்' என்று கேட்டான்.

'மூன்று முறை தும்மியதும் இறந்து விடுவாய்' என்று கூறிவிட்டு வழிப்போக்கன் தன் வழியைப் பார்த்து நடந்தான்.

விவசாயி மூன்று முறை தும்மினுன்: பிறகு பனியின் மீது படுத்துக்கொண்டு கூறினுன்.

'நான் இறந்து விடுவேன்'

அதிருஷ்டவசமாக, அப்பக்கமாக விவசாயியின் அடுத்த வீட்டுக்காரன் குதிரையின் மீது வந்து கொண்டிருந்தான். கீழே பனி மீது விழுந்து கிடக்கும் விவசாயியைப் பார்த்து, அசைத்துவிட்டு, எழுப்பி நிற்க வைத்தான். பின்னர் அவனுடைய முட்டாள்தனத்தைக் கேட்டுச் சிரித்தான். அவனை வீட்டிக்கு அழைத்துச் சென்ருர். இல்லாவிட்டால், பனியில் உறைந்து விவசாயி செத்தே போய் இருப்பான்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்திற் சிறந்தவை விலையிற் குறைந்தவை

# 'விங்க்' பேனா

போல் போயின்ற் பேனா

# 'விங்க்' மை

ஊற்றுப் பேனா மை

மற்றும்

# அலுவலக உபகரணங்கள்

*தயாரிப்பாளர்:*
வெள்ளியம்பதி
அளவெட்டி.

*ஏக விநியோகத்தர்:*
கார்கில்ஸ் (சிலோன்) லிமிடெட்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Sri Lanka

நிறைந்த பயன் குறைந்த விலை

# கூட்டுறவுச் சக்தியின்
## ஆக்கப் பயனை அனுபவியுங்கள்

பண்கோப் சேட் வகைகள்

**பண்கோப் நல்லெண்ணை**

பொலியெஸ்ரர் சூட்டிங் துணிகள்

**பாண், பிஸ்கட், கேக் வகைகள்**

பண்கோப் நீல சவர்க்காரம்

**நைலெக்ஸ் சேலைகள்**

கைத்தறிப் புடவைகள், வேட்டி, சால்வைகள்

இவையனைத்தும்

மக்களுக்காகச் செய்து வழங்கி சேவைபுரிகிறது

**பண்டத்தரிப்புப் பரிஷ**
**ப. நோ. கூட்டுறவுச் சங்கம்**

UN CO-OP பண்டத்தரிப்பு.

தொலைபேசி :

- தலைமை அலுவலகம் : 808, பண்டத்தரிப்பு.
- மொத்த விற்பனை நிலையம் : 36, பண்டத்தரிப்பு

432 A காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும் ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும் அட்டை யா. மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்திலும், அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org